பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸூ ஆடி மீ 11 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 11 ( 26 - 07 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 141

O/L 88
Day Classes
(காலை 8.00 பி. ப. 1.00
முற்றிலும் பாடசாலை
போன்ற வசதிகளுடன்
4 மாத கால தீவிர பயிற்சி
வகுப்பு
நடைபெறுகிறது.
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை

A/L 90
கலை / வர்த்தக
விஞ்ஞான பிரிவுகள்
வட மாகாணத்தின்
முன்னணி ஆசிரியர்களின்
ஒருங்கிணைந்த சேவை
விபரங்களுக்கு
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை

முச்சந்தி முரளி



நன்மை செய்யாவிடில் தீமையாவது செய்யாமல் இருஎண்டதை கொழும்புச் செஞ்சிலுவை அலுவலர்களுக்கு சொல்லிக் குடுத்தால் நல்லது போலை இருக்கு......!

## வடக்கு, கிழக்கிற்கு

# நிவாரணம் எதுவும் இனிக் கிடையாது?

## புனர் நிர்மாண, மறுவாழ்வு திட்டங்கள் மட்டுமே தயாரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு இனிமேல் புதிதாக நிவாரணம் எதுவும் கிடைக்காது என்று அறியவருகிறது.

நிவாரணப் பணிகள் அனைத்தையும் நிறுத்தி, புனர் நிர்மாணம், மறுவாழ்வுக்குரிய திட்டங்களை மட்டுமே வகுத்துச் செயற்படுத்தப் புனர்வாழ்வு அமைச்சு உத்தேசித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

புனர்வாழ்வு அமைச்சின் இந்தப் புதிய முடிவு சம்பந்தமான அறிவித்தல் ஆகஸ்ட் முதல் வாரத்தில் விரைமாக வெளியிடப்படும் என்று அதே அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் மூலம் தகவல் கிடைத்தது.

நீண்ட காலத்துக்கு நிவாரணம் வழங்கிக் கொண்டிருக்க முடியாது புனர்வாழ்வு, புனர் நிர்மாணத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்த முடிவு மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

புனர்வாழ்வுத் துறை அமைச்சு உத்தேசித்துள்ளதன் பிரகாரம் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்குரிய நிவாரணப் பணிகள் அனைத்தும் நிறுத்திக் கொள்ளப்படும். மறுவாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளுக்கே பிரதான இடம் கொடுத்துத் திட்டங்கள் வகுக்கப்படும்.

இதன்படி கடந்த கால அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட மரணச் செலவுப் பணமான 2 ஆயிரம் ரூபா வழங்கப்படுவது நிறுத்தப்படும் என்றும்–

அக்டோபர் பத்தாம் திகதியின் பின்னர் நடந்த அசம்பாவிதங்களினால் இடம்பெயர்ந்தவர்களுக்கும், தொழில்களை இழந்தவர்களுக்கும் முறையே மீளக் குடியமர்த்தவும், தொழில்களை மீளத் தொடங்குவதற்காகவும் தனித் தனியே வழங்க அனுமதிக்கப்பட்ட 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கீடுகள் ரத்துச் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அசம்பாவிதங்கள் முற்றுப்பெற்றுவிட்டன. வழமையான வாழ்க்கை நிலை திரும்பி ( 6 ஆம் பக்கம் பார்க்க )

### உரும்பராயில் இளைஞர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம் ஜூலை 26

உரும்பராய்ப்பகுதியில் நேற்று இளைஞர் ஒருவர் இனந் தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப் பட்டார்.

சதிரவேலு ஜெயக்குமார் [வயது 22] என்ற இளைஞரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவர்.

உரும்பராய் மேற்குப் பகுதியில் காணப்பட்ட இவரது சடலத்தை உரும்பராய் கிராம சேவையாளர் யாழ்–ஆஸ்பத்திரியில் சேர்த்தார். (ஓ-10)

## தமிழர்களின் உரிமைகளை ஒப்பந்தம் நசுக்கித் தள்ளிவிட்டது

### ராஜீவிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம் ஜூலை 26

இலங்கை - இந்திய ஒப்பந்தம் தமிழர்களின் நியாயபூர்வமானஉரிமைகளையும், அபிலாஷைகளையும், மீளப் பெற்றுக் கொடுக்குமென்று அறிவிக்கப்பட்ட போதிலும், கடந்த ஒரு வருட காலத்தில் பிரஸ்தாப ஒப்பந்தம் தமிழர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் நசுக்கித் தள்ளி விட்டது.

வடக்கு, கிழக்கு பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில்மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இணைப்புக் குழுவினரால் இம்மாதம் 20 ஆம் திகதி இட்டு அனுப்பப்பட்ட அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

இனி மேலும் காலம் தாழ்த்தாமல் அமைதிப் படையினரின் இராணுவ நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடு (6 ஆம் பக்கம் பார்க்க)

### தாய்லாந்தில் கூட்டு அரசு?

பாங்கொக், ஜூலை 25

தாய்லாந்து நாடாளுமன்றத் தேர்தலில் எந்த ஓர் அரசியல் கட்சியும் பெரும்பான்மை பெறவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டணி அரசு ஒன்று ஏற்படும் வாய்ப்பே உருவாகியுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதுவரை தற்போதைய பிரதமரை பதவியில் நீடிக்கும்படி அரசியல் கட்சிகள் கேட்டுள்ளன. (எ)

### அதிகாரிகள் அவதானித்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை26

இந்திய அமைதிப் படை உயர் அதிகாரிகள் நேற்று யாழ். நகர வீதிகளில் ரோந்து வந்து ஹர்த்தால் நிலைமைகளை அவதானித்துச் சென்றனர். (ஓ-5)

## தெற்கில் பயங்கரம்:

# பிரதிப் பொலீஸ் மா அதிபரின் வீட்டினுள் புகுந்து மனித வேட்டை!

### இரண்டு குழந்தைகள் உட்பட 4 பேர் பலி!!

கொழும்பு, ஜூலை 26

தென்மாகாண பிரதி பொலீஸ் மா அதிபர் பியதிஸ்ஸ உடுகம்பொலவின் வீட்டினுள் இனந் தெரியாத 7 பேர் புகுந்து நான்கு பேரைச் சுட்டுக் கொன்றனர் என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிறு இரவு காலி நகரில் இச் சம்பவம் இடம்பெற்றது.

அச் சமயம் திரு. உடுகம்பொல வீட்டில் இருக்கவில்லை.

கொல்லப்பட்டவர்களில் திரு. உடுகம்பொலவின் எண்பது வயது தாயார், அவரின் சகோதரரின் 2, 4 வயதுக் குழந்தைகள் அடங்குகின்றனர்.

திரு. உடுகம்பொலவின் சகோதரர் ஒருவரும் கொல்லப்பட்டார்.

காயமடைந்தவர்கள் இரண்டுபேர் காலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர், திரு. உடுகம்பொலவின் பெறுமகனும் சகோதரர் மனைவியுமே அவர்கள்.

இறந்தவர்களின் சடலங்களை அக் கோஷ்டியினர் எரிக்க முயற்சித்தனராம். பின்னர் கிரனேட் ஒன்றைவிசி விட்டு அக் கோஷ்டி சென்றதாகவும் அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## வெலிக்கடை படுகொலை நினைவாக

# வடபகுதி எங்கும் நேற்று பூரண ஹர்த்தால்

யாழ்ப்பாணம், ஜூலை 26

வடபகுதி முழுவதும் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் நேற்று முற்றுமுழுதாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. யாழ் நகர் சூனியப் பிரதேசமாகக் காட்சியளித்தது.

கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார், வவுனியா பகுதிகளிலும் ஹர்த்தால பூரண வெற்றி அளித்ததாகத் தெரிய வந்தது.

1983 ஜூலை 25 இல் வெலிக்கடைச் சிறையில் தமிழீழப் போராளிகளான குட்டிமணி, தங்கத்துரை உட்பட 53 தமிழ்க் கைதிகள் கோரமாகக் கொலைசெய்யப் பட்டதற்கு துக்கம் தெரிவிக்கும் முகமாகவே நேற்றுக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

'டெலோ' இயக்கம் இந்தக் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

ஹர்த்தால் தினமான நேற்று யாழ். குடாநாடு முழுவதும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

ஒரு சில சாப்பாட்டுக் கடைகள், மருந்துசாலை (6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைப் பட்டினத்தில் ஊரடங்கு இன்று தளர்வு

கொழும்பு, ஜூலை 26

திருகோணமலைபபட்டினப் பகுதியிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் அமுல் செய்யப்பட்டு வரும் காலவரையறற ஊரடங்குச் சட்டம இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் அப்பகுதிகளில் பகல் ஊரடங்கு அமுலில் இருக்காது. இரவு 7 மணி தொடக்கம் காலை 5 மணி வரையுமே ஊரடங்கு நடைமுறையில் இருக்கும்.

கடந்த வியாழன் திருமலை நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம், அதனைத்தொடர்ந்து இடம் பெற்ற மோதல்களைத் தொடர்ந்து காலவரையற்ற ஊரடங்குச்சட்டம் அமுலுக்குக்கொண்டு வரப்பட்டது தெரிந்ததே. (ஒ-எ)

### சுபநேரம்

26 - 7 - 1988
ஆடி - 11
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10-32 முதல் 12-02வரை
ராகுகாலம்:
03-02 முதல் 04-32வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பிரதோஷ விரதம்

## முள்ளியவளையில் சிலிண்டர் தாக்குதல்

### ஜவான்கள் இருவர் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 26

முள்ளியவளைப் பகுதியில் நடைபெற்ற சிலிண்டர் வெடித்தாக்குதலின் போது இரண்டு இந்தியப்படை ஜவான்கள் கொல்லப்பட்டதாக அறியவந்துள்ளது.

இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை முள்ளியவளை காட்டுவிளான் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் நடைபெற்றது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:—

ஞாயிற்றுக்கிழமை பகல் பத்துமணி அளவில் இந்திய அமைதிப்படை ஜவான்கள் முல்லைத்தீவு — முள்ளியவளை வீதியில் நடைபவனியாக ரோந்து சென்று கொண்டிருந்தனர்.

முள்ளியவளை காட்டுப் (6 ஆம் பக்கம் பார்க்க)

## உணவு முத்திரை விநியோகம் :

# உதவி அரச அதிபர்களின் ஒத்துழைப்பைக் கோருகிறார் யாழ். அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம், ஜூலை26

யாழ். செயலகம் அடுத்த மாதம் 4 ஆம் திகதிவரை இயங்க அனுமதிக்கப்பட்ட போதிலும் உணவு முத்திரை விநியோகிக்கப்படுவது பூர்த்தியடைவது சந்தேகமே.

ஆகஸ்ட் 15ஆம் திகதிக்குப் பின்னரும் விநியோகம் தாமதித்தால் நிலுவையாக உள்ள ஜூன் மாதத்திற்கான உணவு விநியோகத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போகலாம்.

எனவே வடபகுதி உதவி அரசாங்க அதிபர்களும், கிராம சேவகர்களும் இது விடயத்தில் ஒத்துழைத்து 4ஆம் திகதிக்கு முன்பு உணவு முத்திரைகளை பூரணமாக விநியோகிக்க உதவ வேண்டும்.

இவ்வாறு யாழ். அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் வேண்டுகோள் ( 6 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைச் சங்கம்

### யாழ்ப்பாணத்திலும் பிராந்தியத் தலைமை அலுவலகம் நிறுவக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை26

செஞ்சிலுவைச் சங்கத்தின் பிராந்திய தலைமைக்காரியாலயம் ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட வேண்டும் என்று வடக்கு, கிழக்கு பிரஜைகள் இணைப்புக் குழுவினர் சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தைக் கேட்டுள்ளனர்.

ஜெனிவாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில்வடக்கு, கிழக்குப் பிரஜைகள் இணைப்புக்குழுத் தலைவர் திரு. எஸ். அருணாசலமும் செயலாளர் திரு. எஸ். சிவானந்தராஜாவும் கையெழுத்திட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, கிளி (6ஆம் பக்கம் பார்க்க)

## பஞ்சாப்பில் நேற்று

# சீக்கியக் குருமார் இருவர் சுட்டுக்கொலை!

சண்டிகார், ஜூலை 26

பஞ்சாப் மாநிலத்தில் சீக்கிய மதத் தலைமைக் குருமார்கள் இருவர் தீவிரவாதிகளினால் நேற்றுச் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

லூதியானாவில் குருநானக் என்ஜினியரிங் கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்தபோது இவர்கள் மீது தீவிரவாதிகள் சுட்டனர்.

ஜானி சோஹந் சிங் அந்த இடத்திலேயே இறந்தார், ஜானி பான்சிங் மருத்துவமனையில் இறந்தார்.

சீக்கியக் குருத்துவாரா அமைப்பின் பொதுச் செயலாளரான மான்சிங் கடுமையான காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-எ)

### பரீட்சை தொடரும்

யாழ்ப்பாணம், ஜூலை26

இன்று ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை நடைபெறும்.

நேற்றும் நேற்று முன் தினமும் விடுமுறை தினங்கள் என்பதால் பரீட்சை நடைபெறவில்லை.

இன்று தொடக்கம் திட்டமிடப்பட்ட படி பரீட்சைகள் தொடர்ந்து நடைபெறும். (ஒ-எ)

## ராஜீவ் சொல்கிறார் இப்படி:

# விடுதலைப் புலிகளுக்கு நாம் வாய்ப்புகள் அளித்தோம்

### அவர்கள் பயன்படுத்தவில்லை

புதுடில்லி, ஜூலை 26

விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கு நாம் எவ்வளவோ வாய்ப்புகள் அளித்து விட்டோம். ஆனால் அவர்கள் அவற்றை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தாதது வருந்தத்தக்கது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி.

புதுடில்லியில் நாளேடு ஒன்றுக்கு அளித்த பேட்டியில் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைப் பிரச்சினை பற்றி கருத்து வெளியிட்டார்.

அவர் அந்தப் பேட்டியில் தெரிவித்திருந்ததாவது:–

தமிழருக்கு நன்மை செய்ய விடுதலைப்புலிகள் இயக்கம்விரும்பினால், வன்முறைப் போக்கைக் கைவிட்டு அரசியல் நடைமுறையில் பங் (6ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், அலுமாரி, சட்டில், மெத்தைகள், விருந்தைக் கதிரைகள், ஹோல்செற், Shaw Case, மேசை, கபேட், தையல் மெஷின், கண்ணாடி மேசை, சாப்பாட்டு மேசை, கதிரைகள், பழையயன்னல் நிலைகள், குழாய்க் கிணறு பம்ப், Baby Cot, மற்றும் பல பொருட்கள் மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக்ஸ் சந்தியில்) (5136)

## WALL PAPER FOR SALE

உயர்ந்த ரக இத்தாலிய நாட்டு (Italy) சுவருக்கு ஒட்டும் வர்ணகடதாசிகள் இரண்டு டிசைன்களில் விற்பனைக்குண்டு. கழுவிப்பாவிக்கக் கூடியவை. விபரங்கட்கு T. ஞானகுரு, 104/4, அத்தியடி குறுக்கு வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (C 5908)

## இலங்கைப் புவியியல்

A/L வகுப்புக்குரிய இலங்கைப் புவியியல் வெளிவந்துவிட்டது. அபிவிருத்திப் புவியியல், எறியங்கள் என்பனவற்றின் புதிய பதிப்புகள் விற்பனையாகின்றன. ஆக்கியோன்: க. குணராசா M. A. பிரபல புத்தகசாலைகளில்கிடைக்கும். (5104)

## செங்கை ஆழியான் நாவல்கள்

மழைக்காலம், தீம் தரிகிடதித்தோம், கடல் கோட்டை, அக்கினிக் குஞ்சு, ஓ, அந்த அழகிய பழைய உலகம், கிடுகு வேலி, நடந்தாய் வாழி வழுக்கியாறு விற்பனையாகின்றன. எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். கிளிநொச்சியில் பிக்பென் / லங்கா புத்தகசாலைகள், (5105)

## அடையாள அட்டை தவறிவிட்டது

எனது அடையாள அட்டை தொலைந்து விட்டது. அதன் இலக்கம் 663440101 V (மட்டக்களப்பு) கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5390)

## அறைகள் வாடகைக்கு உண்டு

சகல வசதிகளும் கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு. உடன் நேரில் வரவும். தொடர்பு:- 32 5 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (5389)

## 88 Dec. English New Syllabus

ஆங்கிலம் புதிய பாடத்திற்கமைய நாலு மாத பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 27-7-88 நேரம் மாலை 6. 30-7.30 நாட்கள்: செவ்வாய், புதன், வியாழன், S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (5119)

## கல்வி

ஒய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தரினல்வீடுகளில் ஆங்கிலம் கற்பிக்கப்படும். தொடர்பு: 66/10 கந்தர்மடம், யாழ்ப்பாணம். (5087)


கலர் பிலிம் சுருள்களை கொம்பியூட்டர் மூலம் பிரதி செய்ய விரும்புகிறீர்களா?

FREE 8"X10" ENLARGEMENT

பிரதி 4·00

கொழும்பு ஸ்ரூடியோ யாழ்ப்பாணம்


## தேவை

### தேசிக்காய் தேவை

நன்கு முற்றிப்பழுத்த எலுமிச்சம்பழம்தொகையாக உடனடியாகத் தேவை. அத்துடன் எலுமிச்சை இனத்தைச் சார்ந்த கொடி; சிதம்பர; லெமன்; புளிப்புத் தோடை;நாரத்தங்காய் வகைக் காய்களும் நல்ல விலையில் வாங்கப்படும். தொடர்பு:-ந. கந்தசாமி 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C/5916)

### Stewards தேவை

யாழ் / நகரில் அமைந்துள்ள 'Old Park Chinese Restaurant'' க்கு Stewards தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும் தொடர்பு:- ''Old Park ChineseRestaurant''207, Old Park Road, Jaffna (C 5821)

### WANTED

Accounts/ Audit Trainees Those who have passed G. C. E. (A/L) with Accounts As a Subject Can Apply. Apply Immediately to the Office Manager Accounting Systems and Services (Jaffna) Limited 145, Main Street, Jaffna. (5141)

## பயிர்கள் அழிவு

ஒட்டுசுட்டான், ஜூலை 26

முத்தையன் கட்டு திட்டப்பகுதியை அடிக்கடி படையினர் சுற்றிவளைப்பதால் அப் பகுதியில் பயிரிடப் பட்டுள்ள நெல், வெங்காயம், மிளகாய், நிலக்கடலை என்பவை போதிய கவனிப்பின்றி அழிந்து போகின்றன.

காட்டுப் பன்றிகள், கட்டாக்காலி மாடுகள் பெரும் அழிவை ஏற்படுத்துகின்றன என்று கூறப்படுகிறது. (இ-113)

# விவசாயம் செய்யும் அரச ஊழியர்களுக்கும் ரூ-4000 நிவாரணம் வழங்குக

## அரச அதிபருக்கு மகஜர்

கோப்பாய், ஜூலை 26

விவசாயிகளுக்கு அரசினால் வழங்கப்படும் 4 ஆயிரம்ரூபா நிவாரணம் விவசாயம் செய்யும் அரசாங்க ஊழியருக்கும் வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு கோரும் மகஜர் யாழ். அரசாங்க அதிபருக்கும் வலி கிழக்கு உதவி அரசாங்க அதிபருக்கும் அனுப்பப்பட்டுள்ளது

மகஜரை கோப்பாய் விவசாயிகள் சங்கமும், விவசாயம்செய்யும் அரச ஊழியரும் சேர்ந்து அனுப்பியுள்ளனர்.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அண்மைக்காலச் சம்பவங்களின் போது 80 சதவீத அரச ஊழியர்களின் விவசாய உபகரணங்கள், விளை நிலங்கள் சேதமடைந்துள்ளன.

இவற்றை புதிதாக வாங்குவதற்கோ விளை நிலங்களை திருத்தி அமைப்பதற்கோ, புதிதாக பயிர் நடவோ பணம் இல்லாத நிலையில் இவர்கள் இருந்து வருகின்றனர்.

கிடைக்கும் அரச சம்பளத்தைக் கொண்டு குடும்பத்தை நடாத்த முடியாமலிருக்கும் நிலையில் நிவாரணம் வழங்கப்பட்டால் மட்டுமே மீண்டும் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க முடியும்.

இப்படி மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-72)

# முள்ளியவளை பரீட்சை நிலையம் கடைசி நேரத்தில் திடீர் ரத்து

புதுக்குடியிருப்புஜூலை26

ஜீ. சி. ஈ உயர்தர வகுப்பு கலைத்துறை மாணவர்களுக்கான முள்ளியவளைப் பரீட்சை நிலையம் கடைசி நேரத்தில் ரத்துச்செய்யப்பட்டது.

இதுபற்றி கூறப்படுவதாவது:-

ஜீ. சி ஈ. உயர்தரப் பரீட்சை கலைத்துறை மாணவர்களுக்கு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியிலும், விஞ்ஞானத்துறை மாணவர்களுக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திலும் கடந்த காலங்களில் பரீட்சை நிலையங்கள் ஒதுக்கப்பட்டு வந்தன.

பல மைல்களுக்கு அப்பால் உள்ள துணுக்காய் பாண்டியன்குளம், மாங்குளம்,ஒலுமடு,ஒட்டுசுட்டான்,முத்தையன்கட்டு, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, முல்லைத்தீவு, செம்மலை, அலம்பில், கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், நாயாறு போன்ற கிராமங்களில் இருந்துவந்த ஏராளமான மாணவர்கள் சலந்து கொள்ளும் பரீட்சை நிலையமாக முல்லைத்தீவு இருப்பதனுலேயே மாணவர்களின் வசதியை முன்னிட்டு காலம் காலமாக இந்த ஒழுங்கு செய்யப்பட்டு வந்தது.

ஆனல் இவ்வாண்டு செய்யப்பட்ட திடீர் மாற்றத்தினல் மாணவர்கள் இடவசதி,உணவு வசதி போன்ற பல அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர். (இ-126)

## மது அருந்துதல் - புகைத்தலுக்கு

# கைவிரல் - கழுத்து துண்டிப்புஎன சுவரொட்டி

கொழும்பு, ஜூலை 26

புகைத்தல், மது அருந்துதல் ஆகியவற்றுக்கு எதிராக தென் மாகாணத்தில் பிரசார இயக்கம் ஒன்றை மக்கள் விடுதலை முன்னணி (ஜே,வி.பி.)ஆரம்பித்துள்ளதாகஅறிவிக்கப்படுகிறது.

அக்குரஸ்ஸ என்னும் இடத்தில் இது சம்பந்தமான துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

புகைப்பவர்கள், மது அருந்துபவர்களின் கைவிரல்கள் வெட்டப்படும் அல்லது கழுத்து துண்டிக்கப்படும் என்று அந்தச் சுவரொட்டிகளில் எழுதப்பட்டுள்ளது.

இதன் காரணமாக திக்கவல்ல, தங்காலை பகுதிகளில் பகிரங்கமாக புகைக்கவும் மது பாவிக்கவும் பொதுமக்கள் முன்வருவதில்லை என்று அறிவிக்கப்படுகிறது,

சுவரொட்டிகள் ''தேசபக்தர்கள்'' என்ற பெயரில் ஒட்டப்பட்டுள்ளன. (இ-எ)

# வவுனியா - யாழ் இடையில் 8 இடங்களில் பயணிகள் சோதனை

யாழ்ப்பாணம், ஜூலை 26

வவுனியா— யாழ்ப்பாணம் கண்டி வீதியில் மட்டும் பஸ் பயணிகள்எட்டு இடங்களில் இறங்கி நடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்திய அமைதிப் படையினர் சோதனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி இருப்பதன் காரணமாக பயணிகள் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து பஸ்ஸில் வரும் பயணிகளும், வவுனியாவுக்குரயிலில்வந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் பயணிகளும் இதனல்பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகிறுர்கள்.

சோதனை நடவடிக்கைகளுக்சாகக் கொளுத்தும் வெயிலில்கூட பயணிகள் இறங்கி நடக்கவேண்டிய கட்டாயம்ஏற்பட்டுள்ளதாம். (ஒ-10)

## கூட்டுறவு போசனசாலை

யாழ்ப்பாணம், ஜூலை 26

சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் போசனசாலை ஒன்றை ஆரம்பித்து நடத்திவருகிறது.

சுன்னுகம் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள இந்த போசனசாலையில் சிற்றுண்டிகள் குறைந்த விலையில் விற்பனையாகின்றன. (ஒ)

## சென்னையில் நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 26

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஆதரவில் 'சென்னை புக்ஸ்' நிறுவனத்தினர் இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளனர்.

வெளியீட்டு விழா சென்னையில் மத்திய நூலகக் கட்டடத்தில் அண்மையில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக பதிவாளர் கவிஞர் இ. முருகையனின் ''இன்றைய உலகில் இலக்கியம்'' என்ற நூலும் பேராதனைப் பல்கலைக் கழக முன்னைநாள் பேராசிரியரும் தற்பொழுது லண்டனில் கடமையாற்றுபவருமான கவிஞர் சிவசேகரத்தின் கவிதை நூலும் இவ்வாறு வெளியிடப்பட்டன. (இ-5)

# ஒப்பந்தம் குறித்து அனுரா

கொழும்பு, ஜூலை, 26

சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்தவுடன் அமைதி ஒப்பந்தம் குறித்து இந்தியாவுடன் மீண்டும் பேச்சுக்கள் நடத்துவோம்.

இந்தியத் துருப்புக்களை படிப்படியாக விலக்கிக் கொள்ளும்படி கோருவோம்.

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார். (ஒ-எ)

# ஜனதிபதியிடம் கூட்டாக வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 26

பொதுத்தேர்தல், ஜனதிபதித்தேர்தல் ஆகியன ஒத்திவைக்கப்படமாட்டா என்பதை உறுதிப்படுத்தும்படி சுதந்திரக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் ஐக்கிய முன்னணி, ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், எக்ஸத் ஜாதிக இலங்கை கட்சி ஆகியன ஜனதிபதியைக் கூட்டாகக் கேட்டுள்ளன (இ-எ)

## ஐ. தே. க. காரியக் கமிட்டி கூடுகிறது

கொழும்பு, ஜூலை 26

ஐக்கிய தேசியக்கட்சியின் காரியக் கமிட்டி அடுத்தமாதம் கூடுகின்றது.

அப்போது பொதுத் தேர்தல், ஜனதிபதித் தேர்தல் ஆகியவற்றுக்கான திகதிகள் ஜனதிபதி வேட்பாளர் யார் ஆகியன பற்றி இறுதி முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ - எ)

## வீதி விளக்குகள் மறுசீரமைப்பு

கோப்பாய், ஜூலை 26

கோப்பாய் உப அபிவிருத்திசபைக்கு உட்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகள் யாவும் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன.

அதேசமயம் கோப்பாய் உப அபிவிருத்திச் சபையின் நிருவாகத்தினுள் உட்பட்ட பகுதிகள் யாவற்றுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. (இ - 72)


## பிரயாண ஒழுங்குகள்

SAUDI OPERATION & MAINTENANCE COMPANY LIMITED

S. O. M. C

| | | |
|---|---|---|
| 1. | Hospital Cleaners Male | 456 SR |
| 2. | Hospital Cleaners Females | 456 SR |
| 3. | University Cleaners Males | 456 SR |
| 4. | Masons | 600 SR |
| 5. | Carpenters | 600 SR |
| 6. | Drivers | 700 SR |
| 7 | A. C. Mechanics | 650 SR |
| 8. | Electricians | 650 SR |
| 9. | Plumbers | 650 SR |
| 10 | Mechanics | 650 SR |

AGE 21 — 49 வரை

Air Port Taxும், Medical Feesும் அறவிடப்படமாட்டாது

முற்பணம் அறவிடப்படமாட்டாது.

பிரயாணம் செய்ய கடவுச்சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்டபின் பிரயாணம் செய்யத் தவறின் கடவுச்சீட்டு திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

தலைமைக் காரியாலயம்:

கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்

புகையிரத நிலைய வீதி, சுன்னுகம்.

கிளை 1. கோல்டன ரவல்ஸ் & ரூர்ஸ் குப்பிளான் சந்தி, குப்பிளான்.

கிளை 2 கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ் வன்னிச்சி கோவிலடி, வல்வெட்டி.

(C 5907)



## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வன் சுந்தரலிங்கம் பிரபாகர்

தோற்றம்: 08-07-1967 மறைவு: 08-08-1984

திதி: 26-7-88

அன்புச் செல்வமே, இதயத்தின் அணையாத ஜோதியே, அறிவுச் சுடரே! அன்பு மகனே றஞ்சனே ஐயா! அன்று நீ இருக்க உந்தி கொதிக்குதடா, இன்று நீ இருக்கும் உள்ளம் சிதையுதடா. ஐயா உன் பிரிவால் வாடி நின்று உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டி நிற்கும்

அப்பா, அம்மா, அண்ணுமார், தம்பிமார், தங்கைமார்,

மயிலிட்டி, காங்கேசன்துறை. (5285)



# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## 1. Saudi Arabia: சவூதி அரேபியா:

Saudi Operation & Maintenance Company Limited

S. O. M. C.

| | | |
|---|---|---|
| 1. Electrician | — | SR 600 |
| 2. Mechanic | — | SR 600 |
| 3. A/C. Technician | — | SR 700 |
| 4. Electrical Engineer | — | SR 2000 |
| 5. Plumber | — | SR 600 |
| 6 Drivers | — | SR 600 |
| 7. Masons | — | SR 600 |
| 8. Carpenters | — | SR 600 |
| 9. Eletronic Technician | — | SR 700 |
| 10. Telephone Technician | — | SR 600 |
| 11 Telephone Operator | — | SR 700 |
| 12. Power Plant Operator | — | SR 700 |
| 13. Power Plant Mechanic | — | SR 700 |
| 14. Power Plant Electrician | — | SR 700 |
| 15 Painter | — | SR 600 |
| 16 Welder | — | SR 600 |

Saudi Arabia

Maintenance Workers

| | | |
|---|---|---|
| 1. Work Controler | — | 1100 = 100 |
| 2. Work Settuler | — | 1100 = 100 |
| 3. Material Controler | — | 800 = 100 |
| 4. Have Split Units Technician | — | 900 = 100 |
| 5. Appliance Technician | — | 700 = 100 |
| 6. T. V. Repairman | — | 700 = 100 |
| 7. Carpenter / Locksmith | — | 600 = 100 |
| 8. Plumper | — | 600 = 100 |
| 9. Painter | — | 500 = 100 |
| 10. Jeniter | — | 300 = 100 |
| 11. H.I. Duty Driver | — | 600 = 100 |
| 12. Mechanic Helper | — | 400 = 100 |

Age 21 — 47 Year

நேர்முகப் பரீட்சைக்கு

10-8-88 கொழும்பு சென்று 20-8-88 க்குள் பிரயாணம் செய்யலாம்.

யாவரும் ஆங்கில அறிவு திறமையுடையவர்களாகவும், 4 வருட அனுபவம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

## 2. Kuwait: குவைற்:

United Shiping Company Cleaners

300 Vacancies - Salary 30 K.D

Age 21 — 48 வரை

| | | |
|---|---|---|
| 1. A. C. மெக்கானிக் | — | 60 K.D. |
| 2. மாபிள் கல்லுப்பதிப்போர் | — | 60 K.D. |
| 3. பேணிச்சர் காப்பென்ரர் | — | 60 K.D. |

WITH FOOD ALLOWANCE

FLIGHT: 15-9-88 க்கு முன் பயணம்

மேற்படி விபரம் அறிய உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

T.V. TRAVELS & TOURIST

BROWN ROAD, (Railway Station Front) KOKUVIL.

(C 8369)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சமூகம் இன்று அனுபவிக்கும் வேதனை
# 10 வருடங்களில் முஸ்லிம்களுக்கும் ஏற்படும்

## இந்தியா சென்று பேச்சு நடத்தியது முஸ்லிம்களின் நலன் கருதியே

### முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர் கூறுகிறார்

அம்பாறை, ஜூலை 26 தமிழ் சமூகம் இன்று அனுபவிக்கும் வேதனை இன்னும் 10 வருடங்களில் முஸ்லிம் சமூகத்துக்கும் ஏற்படலாம். இதனால் தான் இந்தியா சென்று தமிழ்க் குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். முஸ்லிம்களின் நலன் கருதியே எமதுகுழு இந்தியா சென்றது. எவரிடமும் மண்டியிடுவதற்காக அல்ல.

முஸ்லிம் ஐக்கிய விடுதலைமுன்னணியின் தலைவரும்முன்னாள்பிரதி அமைச்சருமான அல்-ஹாஜ் எம்.எம். முஸ்தபா மேற்கண்டவாறு கூறினார்.

நிந்தவூர்ப்பகுதியின் பாதுகாப்பு சம்பந்தமான பொதுக்கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் அதிதியாகக்கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின்பிரமுகர்கள் குழு ஒன்று அண்மையில்இந்தியா சென்று தமிழ்க்குழுக்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள்தொடர்பாக அந்தக் கூட்டத்தில்விபரித்தார்.

நிந்தவூர் ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் ஜனாப். ஏ. அமீர்மேசா தலைமையில், நிந்தவூர் முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலய மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

அல் – ஹாஜ் முஸ்தபா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

''வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களுக்கு மட்டும் தாயகமல்ல தமிழ் பேசும் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இவை தாயகம் ஆகும் கிழக்கை விட்டு இங்கு வாழும் முஸ்லிம்கள் வேறு எங்கும் போகமுடியாது.

கொழும்பிலுள்ளவர்கள் சிலருக்கு கிழக்கு முஸ்லிம்கள் அனுபவிக்கும் பிரச்சினைகள் கருத்தரங்குகள் போட்டு விவாதிப்பதற்கான தலையங்கமாகவும், பொழுதுபோக்கு விடயமாகவும் உள்ளன.

அவர்கள் எதையும் அனுபவிக்கவில்லை, நாம் தான் அனுபவிக்கிறோம்.

இன்று உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு எமது இளைஞர்களை சிக்கல்களில் மாட்டிவிடச் சிலர் முனைந்துள்ளனர்

இதனால் இன்று தமிழ் சமுதாயம் அனுபவிக்கும் வேதனை நிலைபோல், இன்னும் பத்து வருடங்களில் எமது இளைஞர்களும் சமூகமும் அந்நிலைக்கு உட்பட நேரிடும்.

சில முட்டாள்கள் நாம் இந்தியா சென்று தீவிரவாத இளைஞர்களுடன் பேசியதை பிழையான செய்கையென விமர்சிக்கின்றனர்,

நாம் இரந்து போனதாகவும் கூறுகின்றனர். இன்றைய பிரச்சினையின் கதாநாயகர்கள் சென்னையில் இருப்பதால்தான் நாம் மூன்று தடவைகள் சென்னை சென்றோம்.

தலைமைப் பீடத்திற்கு ஆசைப்பட்டோ, கிழக்கு முஸ்லிம்களை அடகு வைத்து சுயலாபம் ஈட்டவோ நாம் செல்லவில்லை,

கிழக்குவாழ் முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபை ஆட்சிவரினும் அதில் எமது — மூன்றிலொரு பங்கு உரிமையைப் பெறவுமே நாம் சென்று பேச்சு வார்த்தைகள் நடத்தினோம்.

முஸ்லிம்கள் கௌரவமாகவும், தலைநிமிர்ந்தும் வாழவேண்டும். இதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்தது எமதுகுழுவே ஆகும். —இவ்வாறு அவர் கூறினார். [14]

## மூதூரைச் சேர்ந்த 50 விதவைகள்
### கனேடிய உதவி பெறுவர்

திருகோணமலை ஜூலை 26

வன்செயல் காரணமாக கணவன்மார்களை இழந்த விதவைப் பெண்களுக்கு சுய தொழில் வேலை வாய்ப்புக்கென 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை கனேடிய அரசாங்கம் அன்பளிப்புச் செய்ய முன்வந்துள்ளது.

இதில் ஒரு தொகையான 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையை அண்மையில் திருகோணமலைக்கு விஜயம் செய்த கனேடியத் தூதர் திருமதி கரொலின் மெஸ்கி திருமலை மாவட்ட இந்து இளைஞர்பேரவையின்செயலாளர் திரு.எஸ்.சிவபாதசுந்தரத்திடம் கையளித்துள்ளார்.

மிகுதிப்பணம் மூன்று மாதங்களுக்குள் வழங்கப்படும்.

மூதூர் பகுதியிலுள்ள 50 விதவைகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் முகமாக இந்தப்பணம் பகிர்ந்து கொடுக்கப்படும் என்று திரு. சிவபாதசுந்தரம் கூறினார். (இ-150)

## பரந்தனில் ஆசிரியர் வீட்டில் கொள்ளை

தாளையடி, ஜூலை 26 ஆசிரியர் ஒருவரின் வீட்டிலிருந்து இரவு நேரத்தில் தங்க நகைகள் கொள்ளை அடிக்கப்பட்டன.

பரந்தனில் இச் சம்பவம் நடந்தது.

வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாதோர் சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றனர்.

இக் கொள்ளைச் சம்பவம் பற்றி கிளிநொச்சிப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-144)

## கர்ப்பிணி மரணம்

தாளையடி, ஜூலை 26 வைத்தியசாலைக்கு வந்த நிறை மாதக் கர்ப்பிணிப்பெண் ஒருவர் வானிலிருந்து விழுந்து மரணமானார்.

இச்சம்பவம் கடந்த வாரம் பரந்தன் இராணுவ முகாமுக்கு அண்மையில் நடைபெற்றது.

விசுவமடுவைச்சேர்ந்த திருமதி எஸ். இராசேந்திரம் என்பவரே மரணமானவராவார் (ஒ-144)

## இவர்கள் அவர்களுடன் செல்வதில்லை

மந்துவிலில் பொதுமக்களுடன் இந்திய இராணுவத்தினர் சென்ற பஸ் தாக்குதலுக்கு இலக்கான சம்பவத்தின் பின்னர், இராணுவத்தினர் இப்போது பொதுமக்களுடன் பிரயாணம் செய்வதில்லை.

மேலதிகாரிகள் விதித்த தடையை அடுத்தே அவர்கள் பொதுமக்களுடன் பிரயாணம் செய்வதை தவிர்த்து வருகின்றனர். (ஒ - 126)

## மாணவர்கள்சேஷ்டை

கோப்பாய், ஜூலை 26 தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்று விட்டு வீடு திரும்பும் மாணவர்கள் வீதியால் செல்லும் இளம் பெண்களின் மீது சேஷ்டை செய்து வந்ததை அவதானித்த பொதுமக்கள் அவர்களைப் பிடித்து நையப்புடைத்தனர்.

## யாழ்., கிளிநொச்சி மாவட்ட
# உள்ளூராட்சித் திணைக்கள ஊழியர்கள் இடமாற்றம்

ஊர்காவற்றுறை ஜூலை – 26

யாழ் மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் கடமையாற்றும் உள்ளூராட்சித் திணைக்கள ஊழியர்கள் பலர் இம்மாதம் தொடக்கம் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இவ்விருமாவட்டங்களுக்குள்ளேயே இடமாற்றம் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாண உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட்டின் உத்தரவின் பேரில் இவ்விடமாற்றங்கள் பட்டியல் படுத்தப்பட்டுள்ளன,

இவ்வாண்டிலிருந்து மாவட்ட சபைகள் கலைக்கப்பட்டு பிரதேச சபைகள் ஸ்தாபிக்கப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணக் கச்சேரியில் அபிவிருத்திச் சபை தலைமை அலுவலகத்தில் கடமையாற்றி வந்த ஐம்பதுக்கும் அதிகமான உத்தியோகத்தர்களும் பிரதேச சபை தலைமை அலுவலகங்களுக்கும் உப அலுவலகங்களுக்கும் இடமாற்றம்பெற்றுள்ளனர்.

நிர்வாக உத்தியோகத்தர் தரத்திலிருந்து காரியாலய ஊழியர் தரம் வரைக்குமான பலர் இந்த இடமாற்றத்தில் அடங்கியுள்ளனர்: (ஒ-16)

# சந்திரா பெர்ணண்டோவின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது

### சுவாமி ஜீவானந்தாஜீ அஞ்சலி

மட்டக்களப்பு ஜூலை 26 தமிழ் பேசும் மக்கள் நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் ஏற்பட்டுள்ள வணபிதா சந்திரா பெர்ணண்டோவின் இழப்பு ஈடு செய்ய முடியாதது ஆகும்.

படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு பிரஜைகள்குழுத்தலைவர் வணபிதா சந்திரா பெர்ணண்டோவின் 41 ஆம் நாள் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய இராமகிருஷ்ணமிஷன் முதல்வர் சுவாமி ஜீவானந்தா மேற்கண்டவாறு கூறினார்.

புனித மரியாள் பேராலய முன்றலில் வணபிதா நோயல் இம்மானுவேல் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

மற்றும் இந்து, கிறிஸ்தவ இஸ்லாமிய சமூக, சமய பிரமுகர்கள் பலரும் உரையாற்றினர். (இ-21)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட மாணவருக்கான

# தெரிவுநிலை புள்ளியில் 20 குறைக்கப்பட வேண்டும்

## தொண்டமானுக்கு மகஜர்

கொடிகாமம், ஜூலை 26

யாழ். மாவட்டத்தில் மாணவர் கல்வி நிலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பதால் யாழ். மாவட்டத்துக்கான பல்கலைக் கழகத் தெரிவு நிலைப் புள்ளியை கொழும்பின் தரத்துக்குச் சமமாக மதிப்பிடுதல் அநீதியாகும். எனவே 20 புள்ளிகள் குறைத்து யாழ். மாணவர்களுக்கு மதிப்பிட்டு நீதி வழங்க வேண்டும்.

தென்மராட்சி பிரஜைகள் குழு கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமானுக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் இப்படிக் கூறப்பட்டுள்ளது.

பிரசைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி திரு. த. வேலாயுதம் இம்மகஜரை அனுப்பி வைத்தார். (இ-75)

## கிணற்றில் தவறிவிழுந்து மரணம்

வடமராட்சி, ஜூலை 26

இளம்பெண் ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து மரணமானார்.

கரணவாய் தெற்கைச் சேர்ந்த நல்லையா சசிகலா (வயது 18) என்பவரே மரணமானவர் ஆவர்.

வீட்டிற்குச் சமீபமாக உள்ள கிணறு ஒன்றில் தண்ணீர் அள்ளும்போது தவறுதலாகக்கிணற்றில் வீழ்ந்து இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.


# V.J.S. Express

## யாழ் / கொழும்பு / யாழ்.

## சொகுசு பஸ் சேவை

பிரயாணிகளின் சௌகரியம் கருதி பின்வரும் முகவரிகளில் எமது டிக்கட்டுக்களை பதிவு செய்து கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரயாணச் சீட்டுக்கள் பதிவு செய்யும் இடங்கள்:

யாழ்ப்பாணம்:

லங்கா பில்லிங் ஸ்ரேசன்
Lanka Filling Station
113, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.

Laxsiva Sales Purchase Ltd.
எரிபொருள் நிரப்பு நிலையம்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

றேயல் பார்மஸி
156, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கொழும்பு:

V. J. S.
என்டர்பிரைஸ்
240, காலி வீதி,
வெள்ளவத்தை-6
Tel. 581831

ஸ்ரீ நாகை இன்
Sri Nagaih Inn
176, சென்ட்ரல் வீதி,
கொழும்பு - 12
Tel. 23597

கொழும்பு தலைமைக் காரியாலயம்
41, விவேகானந்தா வீதி.
கொழும்பு - 6
தொலைபேசி;
500748 - 501341

யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலயம்
113, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(C 5931)


## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னைமடியில்

14- 05- 1919

ஆண்டவன் அடியில்

26- 07 - 1987



திரு. அ. பொனிப்பாஸ்
(இளைப்பாறிய ஆசிரியர்)

ஓராண்டு மறைந்தாலும்
உனை நாங்கள் மறப்போமா ?
சீராண்ட மன்னா! - நீ
சிறப்பான சேவை செய்து
போராண்ட ஆசானாய்
பெரும் புகழ் பெற்றவன்றோ!
தேர் ஊர்ந்து வரும் வேளை
திடீரென மறைந்தாயே
திசை ஒன்றும் தெரியாமல்
திகைக்கின்றோம் நாங்கள் ஐயா!

நவாலி சென் பீற்றஸ் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி இன்று (26- 7- 88) செவ்வாய் மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.

நவாலி தெற்கு,
நவாலி.

மனைவி, மக்கள்
உற்றார் உறவினர்.

(5260)

# யாழ்.சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சமாஜத்துக்கு ஆஸி. நிதி உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க சமாஜத்திற்கு ஆஸ்திரேலியா 65 லட்சம் ரூபாவை நிதி உதவியாக வழங்க உள்ளது.

இந்த நிதி பிரஸ்தாப சமாஜத்தின் அங்கத்தவர்களுக்கு விவசாயக் கடன், சுய முயற்சிக் கடன், கால் நடை வளர்ப்புக் கடன் என்பவற்றுக்கு வழங்கப்பட உள்ளது.

இந்தத் தகவலை யாழ். மாவட்ட சிக்கன கடனுதவி சமாஜத்தின் தலைவர் ச. ஞானப்பிரகாசம் உதயனுக்குத் தெரிவித்தார்.

1982 ஆம் ஆண்டில் 20 ஆயிரம் ரூபா சேமிப்புடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த சமாஜம் தற்பொழுது 20 லட்சம் ரூபா நிதியுடன் இயங்கி வருகிறது.

இந்த சமாஜத்தின் கிளைச் சங்கங்களில் 14 ஆயிரத்து 200 அங்கத்தவர்கள் உள்ளனர்.

உரும்பராய், நீர்வேலி, ஏழாலை, கொக்குவில் போன்ற 15 இடங்களில் சிக்கன கடனுதவி சங்களின் கிராம வங்கிகள் இயங்கி வருகின்றன.

இவை அங்கத்தவர்களுக்கு ஆயிரம் ரூபா முதல் ஐயாயிரம் ரூபா வரையான தொகையில் உதவிகளை வழங்கி வருகின்றன.

இதுவரை காலமும் தனது சொந்த நிதியிலேயே செயற்பட்டுவந்த சமாஜம், நிதிப்பற்றுக் குறை காரணமாக தற்பொழுது ஆஸ்திரேலியாவிடமிருந்து 180 லட்சம் ரூபாவை நிதியுதவியாக கோரியிருந்தது.

ஆனால் முதல் கட்டமாக 65 லட்சம் ரூபாவை வழங்க ஆஸ்திரேலியா முன்வந்துள்ளது.

இந்த நிதி உதவி செப்டம்பர் மாதத்தில் வழங்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-9)

# கொடுத்துச்சிவந்த கரம் எம்.ஜி.ஆருடையது வாங்கிச் சிவந்த கரம் கலைஞருடையது!

சென்னை, ஜூலை 26

'யார் முதல்வரானாலும் ஆகலாமே தவிர, கருணாநிதி ஒரு போதும் ஆட்சிக்கு வர முடியாது' என்று நெடுஞ்செழியன் கூறினார்.

சென்னையை அடுத்த ஆலந்தூரில் அ.தி.மு.க. (ஜெ) பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டு நெடுஞ்செழியன் பேசத்தொடங்கியபோது மின்சாரம் தடைப்பட்டது. பின் கார் பட்டரி மூலம் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு மைக்மட்டும்இயங்கியது. அதன் பின் நெடுஞ்செழியன் பேசியதாவது:-

ஒளிமயமான புரட்சித் தலைவர் ஆட்சி போய், இருள் சூழ்ந்தவர்களின் இருண்ட கால ஆட்சி நடக்கிறது. எனவே தான் இங்கு இருள்சூழ்ந்திருக்கிறது மின்சாரம் இயற்கையாக தடைப்பட்டதா, செயற்கையாக ஏற்பட்டதா என்பது எனக்குத்தெரியாது, ஆனால் எப்படி தடைப்பட்டிருந்தாலும்அதனால் எனக்கு அதுபற்றி கவலை இல்லை. எனது 45 ஆண்டு கால அரசியல் வாழ்வில் இதைப்போன்று எத்தனையோ சம்பவங்களை பார்த்துள்ளேன்.

இந்த தமிழகத்தில் அடுத்த முதல்வர் நான் தான் என்று யார் யாரோ கூறி கொள்கின்றனர். மூப்பனார் சிவாஜி கருணாநிதி ஆகியோர் முதல்வராக ஆசைப்படுகின்றனர். அது அவர்கள் சுதந்திரம். அதை தடுக்க யாராலும் முடியாது. யார் முதல்வரானாலும் ஆகலாமே தவிர தி.மு.க. ஆளும் கட்சியாக முடியாது கருணாநிதி முதல்வராகவும் முடியாது. கருணாநிதி தனது ஆட்சியில் ஏழை எளிய மக்களுக்கு என்ன செய்தார்? எதைப் பார்த்து மக்கள் அவருக்கு ஓட்டு போடுவார்கள்? கொடுத்துக் கொடுத்து சிவந்த கரம் எம்.ஜி.ஆர் உடையது என்றால்; வாங்கி வாங்கி சிவந்த கரம் கருணாநிதியுடையது அல்லவா.

தி.மு. தலைவராக அண்ணாதுரை இருந்த போது, 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை போராட்டம், ஆர்ப்பாட்டம் நடத்துவார். அதனால் போராட்டத்திற்கும், ஆர்ப்பாட்டத்திற்கும் மதிப்பு மரியாதை இருந்தது. இப்போது கருணாநிதி தேவை இல்லாமல் எடுத்ததற்கெல்லாம் போராட்டம் நடத்துகிறார். 15 நாளைக்கு ஒரு முறை ஆர்ப்பாட்டம் செய்கிறார். இதனால் கருணாநிதியையோ அவர் நடத்தும் போராட்டங்களையோ யாரும்மதிப்பது கிடையாது.

தமிழக முதல்வர் நாற்காலி பல தியாகிகள், அறிஞர்கள் அமர்ந்ததால் சிறப்பு அடைந்திருந்தது. அதை நொடிப் பொழுதில் தகர்த்து எறிந்து விட்டார். வீரப்பன் ஒன்றும் தெரியாத ஜானகியை முதல்வராக்கி அந்த நாற்காலியையே இழிவுபடுத்தி விட்டார். ஜானகி அம்மையாரை எம்.ஜி.ஆர். மனைவி என்ற முறையில் மதிக்கிறோம்.

தேர்தலை பொறுத்த மட்டில் காங்கிரசுடன் கூட்டணி ஏற்பட வேண்டும்என்றுவிரும்புகிறோம். ஆனால் கூட்டாட்சியை ஏற்கமாட்டோம். தமிழ்நாடு எங்களுக்கு, பாண்டிச்சேரி உங்களுக்கு. ஒவ்வொரு தொகுதியிலும் காங்கிரஸுக்கு கணிசமான அளவு ஓட்டு இருக்கிறது. ஆனால் அந்தஓட்டுக்களை சேகரிக்க தொண்டர்கள் கிடையாது. காங்கிரஸ் தொண்டர்கள் அனைவருக்கும் பதவி உயர்வு வந்து தலைவர்களாக மாறிவிட்டனர். மிச்சம் மீதி இருந்த தொண்டர்கள், "பிள்ளைகளே என்னோடு வாருங்கள்" என்று சிவாஜி அழைத்துப் போய் விட்டார். எனவே காங்கிரஸ் தனித்து நின்றால் இரண்டாம் இடத்தை கூட பிடிக்க முடியாது தி.மு.க. எதிர்க்கட்சியாகிவிடும். ஆகவே பொது எதிரியான தி.மு.க. வை ஒழித்து, தமிழக மக்களுக்கு நல்லாட்சி ஏற்படுத்த காங்கிரஸ் அ.தி.மு.க. (ஜெ) கூட்டணி ஏற்பட வேண்டும். இவ்வாறு நெடுஞ்செழியன் பேசினார்.

# பதவிக்காக யாரும் என்னைத் தேடி வரவில்லை

## கருணாநிதி பேச்சு

சென்னை, ஜூலை26

'என்னைத் தேடி இப்போது பலர் வருகிறார்கள் என்றால் அது பதவிக்காக அல்ல. தி. மு. க. வெற்றிபெறவேண்டும் என்ற நல்லெண்ணத்தினால்தான் வருகிறார்கள்' என்று தி. மு. கழகத் தலைவர் கருணாநிதி கூறினார்.

தி. மு. கழக பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி அமெரிக்கா சென்றுவந்தபின் தன் பயண அனுபவங்களையும், தான்கண்ட காட்சிகளைவும் நிகழ்ச்சிகளையும் தொகுத்து 'அமெரிக்கா ஒரு வானவில்' என்ற தலைப்பில் புத்தகம் எழுதியுள்ளார்.

இதன் வெளியீட்டு விழா சென்னை ராணி சீதை அரங்கில் நடந்தது.

### கருணாநிதி

புத்தகத்தின் முதல் பிரதியை தி. மு. கழகத் தலைவர் கருணாநிதிவெளியிட்டார். முதல் பிரதியைச் சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரக அலுவலகத் துணைத் தூதர் நான்சி சி. ஜான்சன் பெற்றார்.

விழாவில் கருணாநிதி பேசியதாவது:—

### பதவிக்காக அல்ல

நண்பர் 'சாவி' பேசும் போது ஒன்றைக் குறிப்பிட்டார். அதற்கு பதில் நான் சொல்ல வேண்டும்.

தற்போது என்னிடம் வருபவர்கள் எல்லாம் பதவிக்காக வருபவர்கள் அல்ல. தி. மு. கழகம் ஆட்சிக்கு வரவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் தான் வருகின்றார்கள். தி. மு. க.மீது அவர்கள் வைத்திருக்கும் பற்றினால்தான் வருகிறார்கள்.

வாழைப்பழங்களில் மொந்தம்பழம் என்று ஒருவகை உண்டு. அந்தப்பழத்தைப் பழுக்க வைக்க ஒருபானையில் பல ஓட்டைகள் போட்டு புகையை ஊதுவார்கள். அந்தப் புகை மூட்டத்தில் அந்தப் பழம் பழுத்துவிடும்.

### நல்லெண்ணம்

பழத்தைப் பழுக்க வைக்கப் பலர்உதவினார்கள். அதேபோல தி. மு. கவும் தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் பலர் உதவ வருகிறார்கள். இப்போது வருபவர்களை எல்லாம் பதவிக்காகவருகிறார்கள் என்று யாரும் தப்பாக எண்ணக் கூடாது. அதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

### இலவச கண்சிகிச்சை

நான் அமெரிக்கா சென்று திரும்பியபின் அங்கு கண்டவைகளை வைத்துத்தான் கண் ஒளி வழங்கும் திட்டத்தை, இலவச கண் சிகிச்சை முகாம்களை இங்கு அறிமுகப்படுத்தினேன். [illegible] இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தாத நிலையில் முதலாவதாக அறிமுகப்படுத்தினேன். அதேபோல் டாக்டர் கலாநிதி



கருணாநிதி

எழுதியுள்ளபுத்தகத்தில் பல புதியவைகளைப்பற்றி எழுதி உள்ளார்.

இவ்வாறு கருணாநிதி கூறினார். (எ-4)

யாழ் செயலகத்துக்கு

# போதிய உணவு முத்திரைகள் இம்முறை வந்து சேரவில்லை

யாழ்ப்பாணம் ஜூலை 26

யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்த உணவு முத்திரைகள் பற்றாக் குறையாகவே உள்ளன. எனவே போதிய உணவு முத்திரைகளைத் தருவிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தத் தகவலை யாழ் செயலக அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

தற்பொழுது 6 லட்சத்து 23 ஆயிரத்து 700 உணவு முத்திரைகளும் 1 லட்சத்து 14 ஆயிரம் மண்எண்ணெய்முத்திரைகளும் ஆகமொத்தம் 7 லட்சத்து 37 ஆயிரத்து 700 முத்திரைகள் இங்கு வந்து சேர்ந்துள்ளன.

ஆனால் எமக்கு இதனை விட அதிகமான முத்திரைகள் தேவைப்படும். எனவே இன்னும் தேவைப்படும் உணவு முத்திரைகளின் எண்ணிக்கை தற்பொழுது கணிப்பிடப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில் மேலதிக முத்திரைகள் தருவிக்கப்படும்.

இப்படி அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஓ-9)

## ஞானபண்டித வித்தியாலய போட்டிகள்

யாழ்ப்பாணம் ஜூலை 25

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதர் வித்தியாலய ஆரம்பப் பிரிவு விளையாட்டுப் போட்டி பிரஸ்தாப பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

இந்த விளையாட்டுப் போட்டிக்கு ஆரம்பப் பிரிவு அதிபர் திருமதி பு. இராஜேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பாடசாலை அதிபர் கா.கனேசதாசன் தலைமை வகித்தார்.

பழைய மாணவர்கள் நடுவர்களாக கடமையாற்றினர்.

கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த விளையாட்டுப் போட்டி புதிய பாடத்திட்டத்திற்கு அமைய புதிய முறையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (இ - 9)

புத்தூரில் ஞாயிறன்று

# படையினரைக் கண்டு ஓடியவர்களை நோக்கி சூடு!

வடமராட்சி, ஜூலை 26

புத்தூரில் இளைஞர்கள் சிலர் ஓடியதைக் கண்ட அமைதிப்படையினர் அவர்களை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

ஞாயிறு காலை 9.45 மணியளவில் விஷ்ணு கோவிலுக்குச் சமீபமாக இந்தச சம்பவம் இடம் பெற்றது.

பிரஸ்தாப சம்பவத்தின்போது எவரும் காயமடைந்ததாகத் தெரிய வரவில்லை. இளைஞர் அனைவரும் தப்பி ஓடி விட்டனர் என்று கூறப்பட்டது.

இதனை அடுத்து அப்பகுதி முழுவதும் அமைதிப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது- மேலதிக படையினரும் அப்பகுதிக்கு அழைக்கப்பட்டனர்.

பொதுமக்கள் வீதி, வீதியாகத் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர்.

மேலதிக விவரம் இச்செய்தி எழுதும்வரை கிடைக்கவில்லை. (ஒ-160)

## குண்டு துளைக்காத கார்கள்!

கொழும்பு, ஜூலை 26

குண்டு துளைக்காத ஆறு நவீன 'அம்பாசிடர்' கார்களை கடந்த வாரம் அரசு இறக்குமதி செய்தது.

இந்தக் கார்கள் அமைச்சர்களின் பாவிப்புக்கு வழங்கப்படும்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கார்கள் 'சேர்விஸ்' செய்யப்படுகின்றன.

வெளிநாட்டு அரசு ஒன்று இக் கார்களை இலங்கை அரசுக்கு அன்பளிப்பாக வழங்கியிருப்பதாக அறியப்படுகிறது. (ஓ-எ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்



### கணபதிப்பிள்ளை மனோன்மணி

அன்னையின் மடியில்: 25- 5- 1938

ஆண்டவன் அணைப்பில்: 26- 6 1988

காங்கேசன்துறை இடந்தரை ஒழுங்கையைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், திருமதி மனோரஞ்சிதம் (U.K), ஜெயரஞ்சிதம் (U.K), ஞானரஞ்சிதம், கலாரஞ்சிதம், ஆகியோரின் பாசமுள்ள தாயாரும், திரு. க. செல்வராஜா (U.K) அவர்களின் அன்பு மாமியாருமாகிய அமரத்துவமெய்திய திருமதி. கணபதிப்பிள்ளை மனோன்மணி எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் இருப்பிடமாய் அன்பின் திருவுருவாய் எம்மை எல்லாம் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய தெய்வமே! எம்மை விட்டு மறைந்தாலும் நீங்கள் என்றும் எமது இதயக் கமலத்தில் வீற்றிருப்பீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அமரத்துவமெய்திய எங்கள் குலவிளக்கின் ஈமக்கிரியைகளில் கலந்து அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். நேரில் நன்றி தெரிவிக்க முடியாமைக்கு மனம் வருந்துகிறோம்.

எமது தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் (நேற்று) 25- 7- 88 திங்கட்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலையிலும் உருத்திரக்கிரியை, சபிண்டீகரணம் ஆடி மாதம் 11 ஆம் [26- 7- 88] செவ்வாய்க்கிழமை பகல் அன்னாரின் அளவெட்டி இல்லத்திலும் நடைபெறும். அவ்வமயம் அன்றைய கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். நேரில் அழைப்பு விட முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

இங்ஙனம்

கணவன் கணபதிப்பிள்ளையும் பிள்ளைகளும், மருமகனும்

கேணிக்கரை
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(C.5307)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லா ரகத்து.

**பொருள்:**

குற்றமறச் சொற்களை ஆராய்வதில் வல்ல அறிஞரிடத்தில் பல நூல்களையும் கற்றறிந்தவரின் கல்வியானது நன்றாக விளங்கித் தோன்றும்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
22703
யாழ்ப்பாணம்.
26-07-1988
த. பெ. இல. 23

# தவறான மதிப்பீடாகும்

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இன்னும் இரண்டு நாட்களில் ஓராண்டு முடியப்போகிறது.

அதனால், ஒப்பந்தத்தின் வெற்றிதோல்வி குறித்து மதிப்பீடு செய்வதில் பலரும் ஈடுபட்டிருக்கிறார்கள். குறிப்பாக அரசியல் தலைவர்களின் கருத்தை அறிந்து மக்களுக்குச் செல்வதில் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சிச் சேவைகள் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றன.

ஒரு வருடம் பூர்த்தியாகிய போதிலும் ஒப்பந்தம வெற்றிகரமாக, திட்டமிட்டவாறு பலரும் எதிர்பார்த்த மாதிரி நிறைவேறவில்லை; செயற்படவில்லை என்பது எல்லோரும் அறிந்த ஒன்று.

அதற்கான காரண காரியம் என்ன; குறைபாடுகளை, செயற்பாட்டில் உள்ள தடங்கல்களை, சிக்கல்களை எவ்வாறு அரசியல் ரீதியில் களையலாம்; சுமுக நிலையை ஏற்படுத்தலாம் என்பதை அரசியல் தலைவர்கள் எவரும் சிந்திப்பதாக இல்லை.

அவரவர் தான் பிடித்த நிலையில் நின்று தனக்குச் சார்ந்த பக்கத்தில் நின்று கருத்துக் கூறிக் காலம் கடத்துவதாகவே உள்ளது.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை, அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் பேட்டி கண்டார். வடக்கு, கிழக்கில் தேர்தலைத் திணித்து ஒப்பந்தத்தை அமுல் செய்துவிட வேண்டும் என்பதில் ஜனாதிபதி அக்கறையாக இருக்கிறார் என்பதை அவரது பேட்டி எடுத்து விளக்குகிறது.

ஒப்பந்தத்தைப் பொறுத்த மட்டில், ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பேச்சாளர் எனக் கருதப்படும் அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா கடும் போக்குக் காட்டுகிறார்.

தமிழர்களின் முதல் அபிலாஷையான தாயகத்தைக் காக்கும் விவகாரத்திலேயே காமினியார் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக நிற்கிறார். நிரந்தர இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்கிறார். பேச்சுக்கு இடமில்லை என்றால் செயலில் எப்படி வரும்?

அதிகாரப் பரவலாக்கத்திலும் தற்போதைய திட்டம் போதுமானது. காலத்துக்குக் காலம் நடைமுறையில் புதியவற்றைச் சேர்க்கலாம் என்கிறார் அவர்.

வடக்கு கிழக்கை நிரந்தரமாக இணைக்க முடியாது. தற்காலிக இணைப்புக் குறித்து ஒரு பிரகடனத்தைத் தானும் வெளியிட முடியாது என்ற நிலையில் நிற்கும் ஸ்ரீலங்கா அரசு, காலத்துக்குக் காலம் புதியவற்றைச் சேர்க்கும் என்று நம்பி, தமிழர்கள் இனியும் ஏமாறுவார்கள் என்று நினைப்பது ஏனோ?

கடந்த பல வருடங்களாக அடைந்த இழப்புகளின் பின்னரும், தமிழர்கள் வெறும் வாக்குறுதிகளை நம்பி அரசியல் மோசம் போகத் தயாரில்லை என்பதை அமைச்சர் காமினி மட்டுமன்றி, தென்னிலங்கையின் ஏனைய அரசியல்வாதிகளும் மனதில் நன்றாக இருத்திக் கொள்வது மிகவும் அவசியம்.

சிலரைச் சில காலம் ஏமாற்றலாம்; எல்லோரையும் எல்லாக்காலமும் ஏமாற்ற முடியாது.

அரை வேக்காட்டுத் தீர்வுகளை தமிழர்கள் மீது திணிக்க தென்னிலங்கை அரசியலார் நினைத்தால் அது தவறான மதிப்பீடாகும்.

அற நனைந்தவனுக்குக் கூதல் என்ன, குளிர் என்ன? என்ற நிலைக்கு, வாழ்க்கை ஓரத்துக்குப் போயிருக்கும் ஈழத்தமிழர்கள், தென்னிலங்கை அரசுகள் போடும் வெறும் எலும்புத்துண்டுகளைக் கண்டு சரணாகதி அடையத் தயாரில்லை என்பதையும் தென்னிலங்கைத் தலைவர்கள் உணர வேண்டும்.

தமிழர்களின் விருப்பு, வெறுப்புகளுக்கு மதிப்பளித்து, அவற்றைக் கணக்கில் எடுத்துச் செயற்பட்டால் அன்றி, நாட்டில் அரசியல் சுமுக நிலையை உருவாக்குவது கடினம் என்பதையும் அவர்கள் உணருதல் நல்லது.

# வளைகுடா யுத்தத்தில் ஒரு லட்சம் படையினர் யுத்தக் கைதிகள்!

எட்டு ஆண்டுகளாக நடைபெற்று வரும் வளைகுடா யுத்தத்தில் சுமார் ஒரு லட்சம் படையினர் யுத்தக் கைதிகளாகச் சிறை பிடிக்கப்பட்டிருக்கின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்களில் 70 ஆயிரம் ஈராக்கிய படையினரை ஈரான் யுத்தக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளது.

அதேபோல் ஈராக்கும் 35 ஆயிரம் ஈரானியப் படையினரைச் சிறைக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளது. (எ)

# வளைகுடாவில் இருந்துபோர்க்கப்பல்கள் வெளியேற அமெரிக்கா நிபந்தனை

வாஷிங்டன், ஜூலை 25

யுத்த நிறுத்தம் ஏற்பட்டு அமைதி திரும்பினால் மட்டுமே வளைகுடாவில் இருந்து அமெரிக்கப் போர்க் கப்பல்கள் விலக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பிராங்க் கருல்லசி இத்தகவலை வெளியிட்டார்.

இதனிடையில் ஐ நா அதிகாரிகள் இவ்வாரம் செவ்வாய் அல்லது புதன் கிழமை ஈரான், ஈராக் வெளிநாட்டமைச்சர்களுடன் பேச்சுக்கள் நடத்துவர்.

அதன் பின்னர் இரு அமைச்சர்களும் நேரடியாகப் பேச்சுக்களை ஆரம்பிப்பர் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

## தீர்மானம்!

மாஸ்கோ, ஜூலை 25

அஸர்பைஜான் மாநிலத்துடன் உள்ள நொகெர்னோ கரபா பகுதியை ஆர்மெனியாவுடன் சேர்ப்பது இல்லை என்ற சோவியத் அரசின் முடிவை, ஆர்மெனியாக் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது. (எ)

## பொலீஸாரிடம் இருந்து ஆயுதங்கள் பறிமுதல்

குஜராத் மாநில பொலீஸாரிடமிருந்து ஆயுதங்கள் பறிக்கப்பட்டன.

பரா இராணுவத் துருப்புக்கள் பொலீஸ் நிலையங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்தன.

அரசுக்கும் பொலீஸாருக்கும் இடையே ஏற்பட்ட தகராறுகளைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. (எ)

## றேகன் ஆதரவு குறைந்துவருகிறது சோவியத் பத்திரிகை கணிப்பு

லண்டன், ஜூலை 25

அமெரிக்காவில் றேகனிஸம் மங்கி வருகிறது. ஜனநாயகக் கட்சி வேட்பாளர் டுகாகிஸுக்கு வெற்றி வாய்ப்பு அதிகரித்து வருகிறது.

இப்படி சோவியத் பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன.

1980 இல் றேகனைப் பதவிக்குக் கொண்டு வந்த வலது சாரி பழைமை வாதிகள் அலை இப்போது நறைந்து வருகிறது என்று பிராவ்தா கருத்து வெளியிட்டது. (எ)

## மக்களை ஒன்று திரட்டும் சக்தி கலைக்கு உண்டு-பிரம்மானந்தரெட்டி

''சாதி. மதம்போன்றவற்றைக் கடந்து மக்களை ஒன்று திரட்டும் சக்தி, கலைக்குத்தான் உண்டு'' என்று மகாராஷ்டிரா மாநில கவர்னர் பிரம்மானந்த ரெட்டி கூறினார்.

தென்னிந்தியாவின் இசை மற்றும் நாடகப் பிரிவினரின் கலைவிழா கடந்த ஒரு வாரமாக கலைவாணர் அரங்கில் நடந்து வருகிறது. கலைவிழா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மகாராஷ்டிர கவர்னர் பிரம்மானந்த ரெட்டி கலந்து கொண்டார். அவர் பேசியதாவது:

மக்களின் அறிவை வளர்க்க இசை, நாடகம் போன்ற கலைகள் தான் வழிவகுக்கும். கலைகளினால் தெரிவிக்கப்படும் செய்திகள், மனதைத் தொடக் கூடியவை.

பிரிவினை சக்திகளின் வளர்ச்சி நம் ஒற்றுமையைப் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன. நமது ஒற்றுமை காப்பாற்றப் படவேண்டும் நாம் அனைவரும் இந்தியர்கள், பாரதத்தாயின் பிள்ளைகள் என்ற உணர்வை, எல்லா வழிகளிலும் மக்களுக்கு நாம் ஊட்ட வேண்டும்.

ஒருமைப்பாட்டை நிலை நாட்ட கலையைப் போன்ற சக்தி மிகுந்த சாதனம் வேறு எதுவும் இல்லை. சாதி, மதம் போன்ற வேறுபாடுகளைக் கடந்து மக்களை ஒன்று திரட்டும்சக்தி, கலைக்குத்தான் உண்டு. இசை மற்றும் நாடகப் பிரிவினரால் கொண்டாடப்படும் இந்த விழா 40 ஆவது ஆண்டு சுதந்திர தின விழா, ஜவஹர்லால் நேருவின், நூற்றாண்டு விழா இவைகளை ஒட்டிக் கொண்டாடப்படுகிறது. இந்த விழா நாட்டு மக்களிடையே ஒருமைப்பாட்டை வளர்க்கும் சாதனமாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு பிரம்மானந்த ரெட்டி பேசினார்.

## கறுப்பு இனத்தவர் சுட்டுக்கொலை!

கேப்டவுன், ஜூலை 25

பொட்ஸ்வானவுடனான எல்லையில் வைத்து நான்கு கறுப்பு இனத்தவர்களை தென் ஆபிரிக்கத் துருப்புக்கள் சுட்டுக் கொன்றனர் என்று அறிவிக்கப்பட்டது.

விதித் தடையை மீற முயற்சித்தபோதே அவர்கள் சுடப்பட்டனர் என்று தென் ஆபிரிக்க அரசு அறிவித்தது.

## டுகாகிஸ் ஜனநாயக வேட்பாளர்

வாஷிங்டன், ஜூலை 25

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக திரு. மைக்கல் டுகாகிஸ் போட்டியிடுவதை ஜனநாயகக்கட்சி மாநாடு உறுதி செய்தது.

கட்சி டெலிகேட்டுக்களில் 2, 028 பேர் டுகாகிஸை ஆதரித்தனர். (எ)

## கப்பலைக் காணவில்லை

மணிலா, ஜூலை 25

இந்துமா கடலில் சென்று கொண்டிருந்த பிலிப்பீன்ஸ் கப்பல் ஒன்று காணாமற் போய்விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அக் கப்பலில் 25 பிலிப்பீன்ஸ் மாலுமிகளும் இருந்தனர்.

தென் ஆபிரிக்காவில் இருந்து அவுஸ்திரேலியாநோக்கிச் சென்று கொண்டிருந்த சமயமே அது காணமற் போய்விட்டதாக கப்பலின் உரிமையாளர் அறிவித்தார்.

கப்பலைத் தேடும் பணி நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

வெளி உலகில்

# மேற்கு ஜேர்மனியில் மனிதசங்கிலி ஆர்ப்பாட்டம்

மேற்கு ஜேர்மனியில் வடகடல், பால்டிக்கடல் ஆகிய பகுதிகளில் சூழல் நச்சுத் தன்மை காரணமாக ஏராளமான கடல் நாய்கள் உயிரிழந்தன என்று அறிவிக்கப்படுகின்றது. இது குறித்து கரையோரத்தில்வாழும் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

கீல் பட்டின மக்கள் நேற்று சுற்றுப்புற சூழல் பாதுகாப்புப் போராட்டம்ஒன்றைநடத்தினர். 25 மைல் தூரத்துக்கு அவர்கள் கைகோர்த்தபடி மனிதச் சங்கிலி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# நீர்மூழ்கி - மீன்பிடிப்படகு மோதல்; 16 பேர் பலி!

டோக்கியோ, ஜூலை 25

ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று மீன்பிடிப் படகு ஒன்றுடன் மோதியதில் 16 பேர் காணமற் போய்விட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த விபத்து சகாகுடா வில் இடம் பெற்றது.

மீன்பிடிப்படகில் இருந்த 48 பேரும் உடனே கடலில் மூழ்கி விட்டனர். இவர்களில் 18 பேர் பின்னர் காப்பாற்றப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

யாழ் மாவட்டத்தில்

# கால்நடைகளை தாக்கிவந்தது கோமாரி நோய் என உறுதி

## லண்டன் பரிசோதனையில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை26

யாழ். மாவட்டத்தில் கால்நடைகளைத் தாக்கி வந்தது 'கோமாரி' நோய் தான் என உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வடபிராந்திய கால்நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக்களத்தினரால் நோயுற்ற மாட்டிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளை லண்டனுக்கு அனுப்பி பரிசோதித்ததிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனை முடிவுகளை அறிவிக்கும் தந்தி யாழ் மிருக வைத்தியர் திரு. வர்ணலிங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி அவர் தகவல் தருகையில் கடந்த மாதத்தில் யாழ் குடாநாட்டின் கோண்டாவில் கட்டுவன் பகுதிகளில் கால்நடைகளுக்கு ஒருவகை நோய் தொற்றியிருந்தது நோய்க்கான குணங்களை வைத்து இது ''கோமாரி'' நோயாக இருக்கலாம் என நாம் சந்தேகித்தோம்.

ஆனால் கோமாரி நோய்க் குணங்களிலிருந்து சில விதி விலக்குகள் காணப்பட்டமையினால் அதை உறுதி செய்யமுடியவில்லை.

எனவே நாம் நோய் உள்ள கால்நடையின் மாதிரியை வெட்டி எடுத்து பரிசோதனைக்காக என்னெருவ ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பி இருந்தோம்.

அங்கு கோமாரிநோய் ஆராய்ச்சி செய்ய முடியாத காரணத்தினால் அந்தமாதிரிகள் கடந்த ஜூன் 11இல் லண்டனுக்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன.

இதன்முடிவுகள் தந்தி மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டது. அந்தத் தந்தியிலேயே பிரஸ்தாப நோய் உறுதிசெய்யப்பட்டுள்ளது என்றுகூறிய அவர் தற்பொழுது கோமாரி நோய் குடாநாட்டில் பூரணமாகக் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. எனவே இது விடயத்தில் மக்கள் கலக்கம் அடையத் தேவையில்லை.

என்னும் தொடர்ந்து நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் ஆதரவு தரவேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ஒ-9)

## வாகனங்கள் தடுத்து வைப்பு

வடமராட்சி, ஜூலை 26

வல்லைக் கூடாகச் சென்ற சகல வாகனங்களும்ஞாயிறு காலை7.30 மணி தொடக்கம் காலை 9.00 மணிவரை அமைதிப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டன.

பயணிகளும் வாகனங்களும் நுணுக் மாகச் சோதனையிடப்பட்ட பின்னர் பிரயாணம் தொடர அனுமதிக்கப்பட்டது. (ஒ-160)

## திருமலையில் குண்டு வெடித்தபோது...

கொழும்பு ஜூலை 26

திருகோணமலையில் ஹொட்டல் ஒன்றுக்குள் குண்டு வெடித்த சமயம் அருகில் இருந்த அகதி முகாம் ஒன்றில் சுவிஸ் அரச தூதுக்குழு ஒன்று தங்கியிருந்ததாக அறிவிக்கப்பட்டது.

சுவிட்சர்லாந்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதுபற்றி ஆய்வுரை நடத்துவதற்காக இத்தக்குழு இலங்கை வந்துள்ளது தெரிந்ததே. (ஒ-எ)

## பொலீஸ் சேவை: 5,000 பேர் சேர்ககப்படுவர்

கொழும்பு, ஜூலை26

இலங்கைப் பொலீஸ் படைக்கு மேலும் ஐயாயிரம் பேர் சேர்க்கப்படவுள்ளனர்.

இவ்வருட இறுதிக்குள் இவர்கள் திரட்டப்படுவர்.

இலங்கைப் பொலீஸ் சேவையில் தற்சமயம் [illegible] பேர் உள்ளனர். (ஒ-எ)

## டாக்டர் கைது!

கொழும்பு ஜூலை 26

காணமற் பானதாக முதலில் கூறப்பட்ட டாக்டர் அத்துல சுமதிபால என்பவரை பொலீஸார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர் என்று தற்போது அறிவிக்கப்படுகிறது.

ஜே. வி. பி. தலைவர் றோஹண விஜேவீராவுக்கு சிகிச்சை அளித்தார் என்ற தகவலின் [illegible] கைது செய்யப்பட்டார் என்று [illegible]. (ஒ-எ)

## சமய நிகழ்ச்சிகளில்

### இலட்சார்ச்சனை விழா

சாவகச்சேரி, ஜூலை 26

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தான இலட்சார்ச்சனை விழா ஆகஸ்ட் 4ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி 13ஆம் திகதி சனிக்கிழமை பூர்த்தியாகும்.

மறுதினம் ஆடிப்பூரத்தன்று பல் அஷ்டோத்தரசத (108) சங்காபிஷேகமும் பிற்பகல் சுமங்கலி பூசையும் 108 தீப பூசையும் உற்சவமும் நிகழும். (இ-31)

### குருபூர்ணிமா தினம்

கிளிநொச்சி ஜெயந்தி நகர் மகா தேவ அச்சிரமத்தில் குருபூர்ணிமா தினம் எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்படும்.

இந்த குருபூர்ணிமா தினத்தன்று பிரஸ்தாப ஆச்சிரமத்தில் பாத பூஜை, வியாஜபூஜை, பஜிப் பாடல், பண்ணிசை, பூரணை அர்ச்சனை என்பன நடைபெற உள்ளது. (இ-9)

### கலையரசு ஞாபகதினம்

கலையரசு சொர்ணலிங்கம் ஞாபகதின விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3-00 மணிக்கு நடைபெறும்.

மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலையில் நடைபெறும் இந்த வைபவத்தில் ஞாபகார்த்தப் பேருரையை யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி வழங்குவார்.

இந்த விழாவில் ஈழத்துத் தமிழ் நாடக ஆய்வுகள், கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (சி)

## தாமதமாகி வந்துசேரும் பயணிகள் படும்பாடு

யாழ்ப்பாணம். ஜூலை 26

யாழ். குடாநாட்டில் மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரையான ஊரடங்கு அமுல் செய்யப்பட்டதை அடுத்து வெளி மாவட்டங்களில இருந்து மாலையில் வந்து சேரும் பிரயாணிகள் பெரும் சிரமங்களை அனுபவிக்க நேரிடுகிறது.

வவுனியாவிலிருந்து வரும் ரயில் இணைப்பு பஸ்களும் மற்றும் மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய தூர இடங்களிலிருந்து வரும் பஸ்களும் மாலை 5 30 மணிக்குப் பின்னரே யாழ். நகரை வந்தடைகின்றன. ஆனால் யாழ். நகரிலிருந்து உள்ளூர் பஸ் சேவைகள் யாவும் மாலை 4. 30 மணியுடனேயே நிறுத்தப்பட்டு விடுகின்றன.

அதனால் கொழும்பிலிருந்தும், வெளியிடங்களிலிருந்தும் வரும் பயணிகள், பஸ் சேவையின்றித் தவிக்கும் நிலை ஏற்படுகிறது. குறிப்பாக தலைமையில் பிரயாணம் செய்த பல பெண்கள் ஞாயிறு மாலை 5. 30 மணியளவில் யாழ். பஸ் நிலயத்தில் தவித்து நின்றனர்.

இதேவேளையில் கடந்த சனிக்கிழமையன்று வவுனியாவிலிருந்துவந்த ரயில் இணைப்பு பஸ்கள் இரண்டு இங்கு மாலை 6.30 மணிக்கே வந்து சேர்ந்தனவாம்.

அவை பின்னர் கோப்பாய், உரும்பராய் ஊடாக கோண்டாவில் சாலையை நோக்கிச் செலுத்தப்பட்டன. அவ்வேளை உரும்பராயில் வைத்து கோண்டாவில் சாலைக்கு அருகில் அமைதிப் படையினரால் பஸ்கள் மறிக்கப்பட்டன. தொடர்ந்து பயணம் செய்ய அனுமதி மறுக்கப்பட்டது எனக் கூறப்பட்டது.

இந்த பஸ்களில் ஏராளமான பயணிகள் இருந்ததாகவும், அதிகளவு பெண்பயணிகள் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. (ஒ-9)

கடந்த நெருக்கடி காலத்தில்

## றோட்டறி அங்கத்தவர் சேவைக்குத் தலைவர் பாராட்டு

இதுவரை கண்டிராத மிக மோசமான, இருண்ட காலகட்டத்தில், தமது வீடுகளில் ஒழுங்காக இருக்க முடியாத நிலையிலும்கூட, எமது அங்கத்தவர்கள், சேவையாற்றிப் பல செயல் திட்டங்களை நிறைவேற்றியுள்ளதைப் பாராட்டுகிறேன்.

யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டறியன் ஆர். ஜே. குணரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

றோட்டறிக் கழகத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

ஆண்டறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றிய கழகத்தலைவர் மேலும் பேசுகையில்,

யாழ். போதனா வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன், சிவதர்மவள்ளல் க. கனகராசா இவர்களையும் நாம் பாராட்ட வேண்டும்.

''இருவரும் எந்தச் சூழ்நிலையிலும் தமது பணியை அயராது. தொடர்ந்து செய்து வந்தவர்கள்'' என்றார்.

மேற்கூறிய இருவரும் கௌரவ அங்கத்தவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். (இ-சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரு கோண்டாவில்
O/L DAY CLASS
பிரிவு- I
ஆரம்பமாகின்றன
காலை: 8.00 - 1.00

உதயன்
26 - 07 - 1988 செவ்வாய்க்கிழமை

NIRU
Kondavil
A/L 90 விஞ்ஞானம்
Phy - திரு. சௌந்தி
Che - திரு. செல்வா
Ap. Pure- திரு. கிருஸ்ணு
Bot - திரு. பாலா
Zoo - திரு. ஞானம்

# வடமராட்சிப் பகுதி நேற்று முழு அளவில் ஸ்தம்பிதம்

வடமராட்சி, ஜூலை 26

வடமராட்சிப் பகுதி எங்கும் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டது. அப்பகுதி வர்த்தக நிலையங்கள் அனைத்தும் முற்று முழுதாக பூட்டப் பட்டிருந்தன. எங்கும் ஒரே நிசப்தமாக இருந்தது.

போக்குவரத்துச் சேவைகளும் நடைபெறவில்லை. வடமராட்சியின் பிரதான இடங்களான உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, பருத்தித்துறை, புலோலி, நெல்லியடி போன்ற இடங்களில் வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டு இருந்தன.

கல்விநிலையங்களையும் இயங்கவில்லை.

சிலஇடங்களில்வெலிக்கடைச் சிறையில் நடைபெற்ற சம்பவத்தைக் கண்டித்தும் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

இதேவேளை வடமராட்சியில் சில இடங்களில் அதிகாலை 5 மணியில் இருந்து காலை 8.30 மணி வரையில் நான்கு குண்டுகள் வெடிக்க வைக்கப் பட்டன.

குண்டு வெடித்த உடுப்பிட்டிப்பகுதிக்குச்சென்ற அமைதிப்படையினர்பல வீடுகளைச் சோதனையிட்டதோடு வழியில் தென்பட்ட இளைஞர்களைச் சோதனை செய்ததாகவும் அறியவருகிறது.

(ஓ-160)

# கைதான இளைஞர்கள் 29 ஆம் திகதியன்று விடுவிக்கப்படுவரா?

வடமராட்சி, ஜூலை 26

வடமராட்சிப் பகுதியில் அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்ட வாலிபர்களின் விசாரணைகள் துரிதப் படுத்தப்பட்டு வருவதாகவும், நிரபராதிகள் எனக் கருதப்பட்டவர்கள் விரைவில் விடுவிக் கப்படவுள்ளனர் எனவும் அமைதிப்படை வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டவர்களில் அனேகர் பலாலி அமைதிப்படை முகாமில் தடுத்துவைக் கப்பட்டுள்ளார்கள். இவர்களில் நிரபராதிகள் என அடையாளம் காணப்படுவோர் இம் மாதம் 29 ஆம் திகதி விடுவிக்கப்படலாம் என அமைதிப்படை வட்டாரங்கள் வாலிபர்களின் பெற்றோர்களுக்கு நம்பிக்கை தெரிவித்து வருகின்றனவாம்.

(ஓ-160)

# மனைவியைத் தேடுவதில் அவசரம் வேண்டாம்

## கணவன் பொலிஸுக்கு கடிதம்

ஹம்பர்க், ஜூலை 25

காணமற்போன மனைவியைக் கண்டுபிடிப்பதில் அவசரம் காட்ட வேண்டாம் என்று கணவன் ஹம்பர்க் பொலீஸாருக்குக் கடிதம் அனுப்பி வைத்தார்.

ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் இந்த ருசிகரத் தகவலை வெளியிட்டது.

''கடந்த பல வாரங்களாக எனது மனைவியைக் காணவில்லை.

சட்டத்துக்கு உட்பட்டு நடக்கும் எண்ணத்துடன் இத்தகவலை அறிவிக்கின்றேன். தனிப்பட்ட ரீதியில் அவளை இழப்பதைநான் விரும்பவில்லை. ஆனல் அவளைக் கண்டுபிடிப்பதில் அவசரம் காட்டவேண்டாம்.

- இப்படி அக்கணவன் ஹம்பர்க் பொலீஸுக்கு அறிவித்தார்.

யார் அந்தக் கணவன் என்பதை வெளியிட பொலிஸார் விரும்பவில்லை.

இருந்தாலும் காணமற்போன மனைவியைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர். (ஓ-எ)

## பண்டத்தரிப்பில்

பண்டத்தரிப்பு, ஜூலை 26

பண்டத்தரிப்பில் நேற்று ஹர்த்தால் காரணமாக சன நடமாட்டம் மிக மிகக்குறைவாகக் காணப்பட்டது. தேனீர் கடைகள் மட்டும் ஒற்றைக்கதவில் திறந்திருந்தன.

அவசிய கருமங்களுக்காக மட்டும் கால்நடையிலும், சைக்கிள்களிலும் செல்லும் சிலரையே காணக் கூடியதாக இருந்தது. (ஓ-120)

## மானிப்பாயில்

மானிப்பாய், ஜூலை 26

மானிப்பாய் நகரம் நேற்று முற்றாகச் செயலிழந்து காணப்பட்டது.

வர்த்தக நிலையங்கள், வங்கிகள், கூட்டுறவுக் கடைகள், கல்விக் கூடங்கள் மற்றும் தொழிற்சாலைகள் யாவும் மூடப் பட்டிருந்தன.

மானிப்பாய் மத்திய சந்தையில் காலையில் சிறிது கூட்டம் காணப் பட்டாலும் பத்து மணியுடன் அதுவும் வெறிச்சோடியிருந்தது.

(ஓ-90)

## தமிழர்களின் . . . ,

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

தலைப் புலிகளின் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும், பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எங்களிடமிருந்துமேற் குறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமாக விளக்கம் ஏதாவது கோரவேண்டுமென்று தாங்கள் கருதினல், உங்கள் பிரதிநிதிகளுடன் நாம், அமைச்சர்கள் மட்டத்தில் சந்தித்துப் பேசுவதை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

நாம்காலத்துக்குகாலம் வடக்கு – கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் மக்களின் அவல நிலை குறித்து தெரிவித்த போதும், எமது கோரிக்கைகளை அசிரத்தையுடன் நோக்கும் தங்களின் விடாப்பிடியான போக்கு, இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை விரைவில் செயற்படச் செய்வதற்குஉகந்ததான நிலையை உண்டு பண்ணுமென்று நாம் கருதவில்லை.

தமிழ் மக்கள் பலத்த ஏமாற்றமும் பீதியும் அடையும் அளவுக்கு இந்திய அமைதி காக்கும் படை அதன் இராணுவ நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது.

வன்னிப் பிரதேசங்களில் ''ஒப்பரேஷன் செக்மேற்'' அமுல் செய்யப்படுகிறது.

மேற்கூறிய இராணுவ நடவடிக்கைகள் யாவும் தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட பிரகடனப் படுத்தப் படாத யுத்தம் என்பதை நிரூபித்து விட்டன.

கடந்த மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் எமது குழு நான்கு மகஜர்களை அனுப்பியுள்ளது.

அவைகளில் உடனடியாக போர் நிறுத்தம் ஏற்படுத்தி இராணுவ நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளிவைக்கவேண்டுமென்று கோரியிருந்தோம். ஆனல் தங்களிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை.

தங்களின் இச் செயல்; எமக்கு பெரும் வேதனையையும் ஏமாற்றத்தையும் அளித்துள்ளது.

இப்படி மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியஅமைதிப்படையின் பலாலி தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டே, நகரக் கமாண்டர் பிரிகேடியர் காலோன் ஆகியோருக்கூடாகவே மகஜர் அனுப்பப்பட்டுள்ளது' (இ-6)

# வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிலக்கண்ணியில் 4 ஜவான்கள் மரணம்

கொழும்பு, ஜூலை 26

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த 24 மணித்தியாலத்தில் இடம்பெற்ற சம்பவங்களில் இந்திய அமைதிப் படை ஜவான்கள் நால்வர் உயிரிழந்தனர்.

நிலக்கண்ணி வெடியில் சிக்கி இவர்கள் உயிரிழந்தனர் என்று இந்தியத் தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

இன்னெரு மோதலில் மூன்று போராளிகள் உயிரிழந்தனர் என்றும் ஒரு போராளி காயமடைந்தார் என்றும் அறிவிக்கப்பட்டது.

## வாக்குவாதம் மரணத்தில் முடிந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 26

இரு நபர்களுக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறி மரணத்தில் முடிந்தது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் குருநகர்ப் பகுதியில் நடைபெற்றது.

இறந்தவர் குருநகரைச் சேர்ந்த என். தேவதாஸ் (64 வயது) ஆவார்.

சம்பவம்பற்றி அறியவருவதாவது:-

நேற்று முன்தினம் மாலையில் இறந்தவருக்கும் வேறு நபர் ஒருவருக்கும் இடையில்குடும்ப தகராறு காரணமாக வாக்குவாதம் தோன்றியது.

இந்த வாக்குவாதம் கைகலப்பாக மாறியது அதில் பிரஸ்தாப நபருக்கு பலத்த காயமெதுவும் ஏற்படாத போதிலும் கீழே விழுந்தவர் இறந்து விட்டாராம்.

இவரது சடலம் பின்னர் யாழ். வைத்திய சாலையில் ஒப்படைக்கப் பட்டது (ஓ-9)

## யாழ்ப்பாணத்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நொச்சி, மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க அனுமதிதருமாறு யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினர் கொழும்புத் தலைமையகத்திற்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இவ் வேண்டுகோள் நிராகரிக்கப் பட்டதைத் தொடர்ந்தே இக் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (ஓ-5)

## அவசரப் பேச்சு

ஈரானின் வெளியுறவு அமைச்சர் வேலாயடி ஐ.நா. வின் பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலருடன் அவசரப் பேச்சுக்களை ஆரம்பித் தார்.

## வடபகுதி...

கள் தவிர ஏனைய கடைகள் அனைத்தும் முற்றாக மூடப்பட்டிருந்தன.

இ.போ. சபை பஸ்களோ, தனியார் பஸ்களோ எதுவும் சேவையில் ஈடுபடவில்லை.

படமாளிகைகள், மினி சினிமாக்கள் எதுவும் இயங்கவில்லை. கல்வி நிலையங்களும் மூடப் பட்டிருந்தன.

கொழும்பு போன்ற வெளியிடங்களில் இருந்து யாழ்நகருக்கு வாகனங்கள் எதுவும் வரவில்லை. (ஓ-9-5)

## நிவாரணம்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விட்டது என்ற கருதுகோளின் அடிப்படையிலேயே புதிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது.

இதன்காரணமாக, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உடனடி நிவாரண [illegible] நிறுத்தப்பட்[illegible] அறிய வருகிறது. (அ-9)

# முள்ளியவளைச் சம்பவம்: வெடிச் சத்தம் கேட்டது; நண்பர் தூக்கி வீசப்பட்டார்

## காயப்பட்டவர் கூறிய தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 26

''எங்களைப் பார்க்காமல் தலையைக் கீழே குனிந்தபடி சைக்கிளை உருட்டிச் செல்லுங்கள்'' என்று படையினர் கூறியதும் நாம் இறங்கி சைக்கிளை உருட்டிக் கொண்டு சிறிது தூரம் சென்றதும் பெரிய வெடிச்சத்தம் ஒன்று கேட்டது.

அப்போது என்னுடன் வந்தவரான தங்கவேலு தூக்கி வீசப்பட்டார். அவர் இறந்ததாக பின்னர் அறிந்தேன்.

நான் குப்புற விழுந்து படுத்துக்கொண்டேன்.

ஞாயிற்றுக்கிழமை முள்ளியவளையில் நடைபெற்ற சிலிண்டர் தாக்குதலின்போது காயமடைந்தவரான வீரமலை சங்கரப்பிள்ளை (வயது 22) இவ்வாறு தெரிவித்தார்.

இடுப்பில் காயமடைந்த நிலையில் இவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மீன் வியாபாரத்தைத் தொழிலாகக் கொண்ட அவர் தமது அனுபவம் பற்றி மேலும் கூறியதாவது;—

நான் இரண்டரை வருடங்களாக இப்பகுதியில் மீன் வியாபாரம் செய்துவருகிறேன்.

ஞாயிற்றுக்கிழமையும் வழமைபோல் மீன் வியாபாரத்துக்காக எனது நண்பரான தங்கவேலும் நானும் முல்லைத்தீவு— முள்ளியவளை வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்தோம்.

அப்பொழுது பகல் பத்துமணி இருக்கும். முள்ளியவளை காட்டுவிளான் பிள்ளையார் கோவிலை நாம் அண்மித்ததும் காட்டுப் பகுதியின் இரண்டு பக்கங்களிலும் இந்தியப்படையினர் நிற்பதைக் கண்டோம்.

நான் அவர்களை பார்த்தபடி சென்ற பொழுது எங்களைப் பார்க்க வேண்டாம் என்றும் சைக்கிளை விட்டு கீழே இறங்கி தலையைக் குனிந்து கொண்டு போகுமாறும் எம்மை அவர்கள் பணித்தனர்.

இதனை அடுத்து நானும் எனது நண்பனும் சைக்கிளை உருட்டிக் கொண்டு சென்ருேம்.

அப்பொழுது திடீரென பெரிய வெடிச் சத்தம் ஒன்று கேட்டது.

இதனை அடுத்து என்னுடன் வந்த நண்பர் தூக்கி வீசப்பட்டார்.

காயமடைந்த நிலையில் நான் தவழ்ந்து தவழ்ந்து சென்று அமைதிப்படையினரிடம் எனது நிலையை விளங்கப்படுத்தினேன்.

பின்னர் அவர்கள் உதவியிடன் முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு சென்று சிகிச்சைபெற்றதன் பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஓ-10)

## உதவி அரச----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ளார்.

யாழ். செயலகத்தின் செயற்பாடுகளை ஆகஸ்ட் 4ஆம் திகதிவரை நீடிக்க முயற்சிஎடுத்துள்ளோம். இந்தத் தவணைக்குள் ஊழியர்கள் முழுநேர வேலைகளை மேற்கொண்டு ஓய்வூதியம், சம்பளம், உணவு முத்திரை என்பன சம்பந்தமான வேலைகளை மேற்கொள்ள பணிக்கப் பட்டுள்ளனர்.

இந்த நிலையில் ஓய்வூதியம், சம்பள நடவடிக்கைகள் ஒரளவுக்கு மேற்கொள்ளப்பட்டு விட்டன.

ஆனல் உணவு முத்திரை விநியோகத்தைப் பொறுத்தமட்டில் பல பகுதிகளின் உணவு முத்திரைகளை அந்தந்தப் பகுதி உதவி அரசாங்க அதிபர்களே இன்னும் எடுத்துச் செல்லவில்லை.

இந்த நிலையில் இவை எடுத்துச் செல்லப்பட்டு அடுத்த நடவடிக்கையாக கிராம சேவையாளர்கள் மூலம் விநியோகிக்கப்பட வேண்டும்.

துரிதமாகச் செயற்பட்டால்தான் இந்த விநியோகத்தை நான்காம் திகதிக்கு முன்னர் பூரணமாகமேற்கொள்ள முடியும்.

எனவே இந்த விடயத்தில் சகல உதவி அரசாங்க அதிபர்களும், கிராமசேவகர்களும் தங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் — என்று அவர் மேலும் கூறினர்.

## முள்ளியவளை----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் இவர்கள் சென்றபோது சிலிண்டர் வெடி வெடித்ததாகவும் இதனல் இந்தியப் படை ஜவான்கள் இரண்டு பேர் கொல்லப் பட்டதாகவும் சிலர் காயமடைந்ததாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஓ-10)

## விடுதலைப்புலி-.

[1ம்பக்கத் தொடர்ச்சி]

கேற்க முன்வரவேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு நாம் எவ்வளவோ வாய்ப்புகள் அளித்துவிட்டோம். ஆனல் அவர்கள் அவற்றை ஆக்கபூர்வமாக பயன்படுத்தாதது வருந்தத்தக்கது.

இந்திய - இலங்கை உடன்பாட்டின் பல அம்சங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன.

இப்படிப் பிரதமர் தெரிவித்தார். (அ-எ)

# மரண அறிவித்தல்கள்

## திரு. மா. செல்வகுருநாதன்

மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. மா. செல்வகுருநாதன் (Art Teacher Jaffna Hindu College) காலமானர்.

இவர் காலஞ்சென்ற திரு. மாணிக்கராஜா, திருமதி மாணிக்கராஜா ஆகியோரின் அன்பு மகனும் திருமதி தியானதேவியின் (Retired Teacher Kokuvil Hindu College) அருமைக் கணவரும் செல்விகள் உமாகாந்தி, ஸ்ரீஸ்காந்தி, ரூபகாந்தி ஆகியோரின் அருமைத் தந்தையும், திருவாளர்கள் எம் சிவகுருநாதன் (CCREV Kachcheri Jaffna) எம். பாலகுருநாதன் (Radio Officer Greek Ship) எம். யோககுருநாதன் (Sentls Plastic Crafts Jaffna) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திரு எம். கிருஷ்ணசாமி அவர்களின் மருமகனும் திருவாளர்கள் கே. குகதேவா (Kuwait) காலஞ்சென்ற கே. ஜெகதேவா, Dr.K. சபாநாயகம் (Canada) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னரின் ஈமக்கிரியைகள் இல. 91 சம்பியன்லேன், கொக்குவில் கிழக்கு இல்லத்தில் நாளை 27-7-88 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்று பூதவுடல்காலை 10.00 மணிக்கு தகனகிரியைக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்;

மனைவி, பிள்ளைகள்.

( 5143 )

## திரு. இராசையா அசோக் இளமுருகன்

கொட்டடி காலஞ்சென்ற புறக்டர் சுப்பாபிள்ளை இராசையாவினதும் திருமதி நேசமணி இராசையாவின் மகன் அசோக் இளமுருகன் லண்டனில் 24-7-88 அன்று அகால மரணமானர். இவர் சாவித்திரி, பரிமேல் அழகன் (லண்டன்) நித்தியானந்தன் (கணக்காளர் இ. போ. ச. கோண்டாவில்), ஸ்ரீரங்கன் (கணக்காளர் கல்வித் திணைக்களம் மட்டக்களப்பு), ஜனகன் (ஜேர்மனி), சத்தியபாமா, ஜெயராணி, ஜனக்குமார் (ரோசா நகைமாளிகை, டியூஷன் சென்டர்), சிவகுமாரி, விஜயகுமாரி அவர்களின் அன்புச் சகோதரரும், சபாநந்தன் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ்), வசந்தி (லண்டன்), ஜமுன (இ. போ. ச. கோண்டாவில்), இந்திரா, ஸ்ரீதயக்குமார் (மட்டக்களப்பு), ஸ்ரீநிவாஸன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: இ. நித்தியானந்தன்
154, கன்னதிட்டி ரோட்,
யாழ்ப்பாணம். (5144)

யாழ். இந்து
பழைய மாணவர்களுக்கு

எமது கல்லூரியின் சித்திர ஆசிரியர் திரு. எம். செல்வகுருநாதன் அவர்கள் 24-7-88 அன்று காலமாகிவிட்டார் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னருக்கு எமது இறுதி அஞ்சலியைச் செலுத்துவதற்காக சகல பழைய மாணவர்களையும் 27-07-88 அன்று காலை 9-00மணிக்கு 91, சம்பியன் ஒழுங்கை கொக்குவில் என்ற முகவரியில் ஒன்று கூடும்படி வேண்டிக்கொள்ளுகின்றோம்.

இச்சந்தர்ப்பத்தில் அன்னரின் பிரிவால் துயருறும் அன்பு மனைவி, ஆசைமக்கள், குடும்பத்தினர், உறவினர் சகலருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சு. டிவகலாலா,
செயலாளர்.
பழைய மாணவர் சங்கம்.

விக்னு
டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)
O/L பிரிவு 5
Day Classes
(8-30 — 1-30)
ஆரம்பம்: 27-7-88
முக்கிய குறிப்பு:-
1. கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.
2. மாணவர்களின் நலன் கருதி O/L பயிற்சிப் பரீட்சை எம் நிறுவனத்தில் மட்டுமே இலவசமாக நடாத்தப்பட்டது தெரிந்ததே. இவ்வாறு ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படும்.
(C-5836)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 26 - 07 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Tuesday 26th July 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org